Registered as a Newspaper

# உதயன் சஞ்சீவி

சுடர் : 37 கதிர் : 310 | ஞாயிற்றுக்கிழமை 02 ஒக்ரோபர் 2022 | புரட்டாதி 15 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16+08 | விலை: 60/=

அழுத்தங்களுக்கு அடிபணிந்தார் ரணில்

# உயர்பாதுகாப்பு வலயங்கள்; வர்த்தமானி நேற்று வாபஸ்!



**கொழும்பு, ஒக்ரோபர் 2**

**கொழும்பின் பல பகுதிகளை உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி அண்மையில் வெளியிடப்பட்ட அதிசிறப்பு வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுப் புதிய வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.** 15

## பெற்றோல் விலை 40 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, ஒக். 2

நேற்று நள்ளிரவு முதல் ஒக்ரேன் 92 பெற்றோலின் விலை லீற்றருக்கு 40 ரூபாவால் குறைவடைந்து 410 ரூபாவுக்கும், ஒக்ரேன் 95 பெற்றோலின் விலை 15

## மின்சாரக் கட்டண நிலுவை ரூ. 4 ஆயிரம் எனில் ஆபத்து

கிளிநொச்சி, ஒக். 2

கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர் அலுவலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் 4 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமான மின் கட்டண நிலுவை உள்ள 15

## மின் ஒழுக்கால் பரவிய தீயால் இளம் தம்பதி பரிதாபச் சாவு!



யாழ்ப்பாணம், ஒக். 2

மின் ஒழுக்கு ஏற்பட்டதையடுத்து படுக்கை அறையில் சேமித்து வைத்திருந்த பெற்றோலில் தீப் பற்றியதால் தூக்கத்திலிருந்த கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு 15

## உயிர்கொல்லி ஹெரோய்னுடன் ஊவா பல்கலை மாணவன் கைது

யாழ்ப்பாணம், ஒக். 2

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த சந்தேகத்தில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவனை கைது செய்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

## உயிர்கொல்லி ஹெரோய்ன் பிரதான வியாபாரி கைது

யாழ்ப்பாணம், ஒக். 2

உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப் பொருளை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரும் பிரதான வியாபாரி ஒருவரை யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைது செய்துள்ளனர்.

யாழ். பொம்மைவெளிப் பகுதியைச் சேர்ந்த 52 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இவர் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்ன் 15

## மஹிந்தவின் வீடுதான் கோத்தாவுக்கு தேவையாம்

கொழும்பு, ஒக். 2

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தற்போது வசிக்கும் ஹெக்டர் கொப்பேகடுவ வீதியில் அமைந்துள்ள வீட்டை முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி அலுவலகத்துக்கு கோரிக்கை கிடைத்துள்ளதாக 15

வடக்கில்

## ஹெரோய்ன் பாவனை அதிகரிப்பு அரசாங்கத்துக்கு கடும் கவலை!

### நீலிக்கண்ணீர் வடிக்கிறார் பிரதமர் தினேஷ்



கொழும்பு, ஒக். 2

வடக்கு மாகாணத்தில் ஹெரோய்ன் போதைப்பொருள் பாவனை திடீரென அதிகரித்தமை மிகவும் 15

## மின்வெட்டு குறையும்

கொழும்பு, ஒக். 2

நுரைச்சோலை அனல் மின் நிலைய மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறு சீர் 15

## மாணவர்களிடம் தேவையற்ற கட்டணங்கள் அறவிடத் தடை

### கல்வி அமைச்சு இறுக்கமான அறிவிப்பு

கொழும்பு, ஒக். 2

கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக் கட்டணங்கள் தவிர ஏனைய நிகழ்வுகளுக்காக சிறுவர்கள் மற்றும் பெற்றோரிடம் பணம் வசூலிப்பதைத் தவிர்க்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க பாடசாலை நிர்வாகங்களிடம் 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலக சிறுவர் தினத்தில்

# நாம் காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை தேடுகிறோம்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கவலை

**வவுனியா, ஒக். 2**

**உலகளாவிய ரீதியில் குழந்தைகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட சர்வதேச சிறுவர் தினத்தில் நாம் காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை தேடிக்கொண்டிருக்கிறோம் - இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.**



சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் குறிப்பிடுகையில்,

சர்வதேச ஒற்றுமை மற்றும், உலகளவில் குழந்தைகளிடையேயான விழிப்புணர்வு அவர்களின் நலனை மேம்படுத்துவதற்காக இந்த நாள் உருவாக்கப்பட்டது. இன்று சிறுவர்களுக்காக உலகெங்கும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறுகின்றன.

ஆனால், நாங்கள், சிறிலங்கா இராணுவத்தினரால் காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை இன்றும் தேடியலைந்து கொண்டிருக்கின்றோம்.

இந்தப் போர்க்குற்றங்களுக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் நீதி பெற்றுக்கொடுக்கும் என நம்புகின்றோம்.

நாட்டில் சட்டம், ஒழுங்கு இல்லை. குருந்தூர்மலையிலுள்ள இந்துக் கோவில் அழிக்கப்பட்டு விகாரை எழுப்பப்படுகின்றது. திருக்கோணேஸ்வர ஆலய சூழலை அண்மித்த பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றன. உண்மையான வரலாற்றை அவர்கள் திரும்பிப் பார்க்க வேண்டும்.

இந்தியா எமது உண்மையான நண்பன் அல்லன். தமிழர் படும் துன்பங்களை கைகட்டி வேடிக்கை மாத்திரமே பார்க்கின்றது. எமது பிரச்சினைகளுக்கு நீதியை வலியுறுத்த மோடி ஆட்சிக்கு அக்கறை இல்லை. எமக்கான உரிமையை நாமே போராடிப் பெறவேண்டும் - என்றனர். (ச-110)

## மஹிந்தவை பிரதமராக்க ரணிலுக்கு அதிகாரமுண்டு

### குமார வெல்கம தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக நியமிக்க வழி உள்ளது. ஜனாதிபதிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மஹிந்தவை மீண்டும் பிரதமராக நியமிக்க படையொன்று உருவாக்கப்பட்டு வருவதாக மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்த கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பதவியில் அமர்த்துவதற்கு எந்தச் சக்தியும் இல்லை. ராஜபக்ச அலை ஏற்கனவே ஓய்ந்துவிட்டது. ராஜபக்சவை மீண்டும் தேர்ந்தெடுக்க முடியாது. ஆனால், எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்பதை என்னால் கணிக்க முடியாது. மஹிந்த ராஜபக்சவை மீண்டும் பிரதமராக நியமிக்க வழி உள்ளது. ஜனாதிபதிக்கு அதற்கான அதிகாரம் உள்ளது. ஆனால், இந்த நாட்டு மக்கள் ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவதை விரும்பவில்லை - என்றார். (ம-14,இ)

## சட்டவிரோத மதுப்போத்தல்கள் கண்டறிவதற்கு புதிய செயலி

கொழும்பு, ஒக். 2

சந்தையில் சட்டவிரோத மதுப்போத்தல்களை இனங்காண்பதற்கு கலால் திணைக்களம் புதிய கணினி செயலி ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மதுபான போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள பாதுகாப்பு ஸ்ரிக்கில் உள்ள கியூ.ஆர் குறியூட்டை குறித்த கணினி செயலியைக் கொண்டு ஸ்மார்ட் போன் மூலம் ஸ்கான் செய்து கண்டறிய முடியும்.

இந்தச் செயலி மூலம் தேவையான தகவல்களைப் பெற முடியாது நிராகரிக்கப்பட்டால் உடன் முறைப்பாடு அளிக்கலாம்.

இந்த செயலியை அனைத்து அன்ரோய்ட் அலைபேசி மற்றும் அப்பிள் அலைபேசிகள் மூலம் பதிவிறக்கம் செய்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என கலால் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொருளாதார மீட்சிக்கு திட்டமிடல்கள் இல்லை!

### காவிந்த ஜயவர்த்தன தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 2

நாட்டைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு முறையான எந்தவொரு வேலைத்திட்டமும் அரசாங்கத்திடம் இல்லை. அதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கால தாமதமடைகின்றது- இவ்வாறு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சியாளர்களின் ஊழல் மோசடிச் செயற்பாடுகளே தற்போது நாடு முழுமையாக வங்குரோத்து நிலையை அடைய பிரதான காரணம். நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள மக்கள் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது தீர்வு பெற்றுத்தருமாறுகோரி வீதிகளில் இறங்கிப் போராடுகிறார்கள்.

அரசாங்கத்துக்கு நாட்டில் அடிப்படை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது, நீதியை எவ்வாறு நிலைநாட்டுவது, நிம்மதியாக வாழக்கூடிய ஒரு நாட்டை மக்களுக்கு எவ்வாறு பெற்றுக்கொடுப்பது என்பது தொடர்பில் எதுவித கரிசனையும் கிடையாது. இதன் காரணமாகவே சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி பிற்போடப்படுகிறது - என்றார். (ச-22)

## உயர் பாதுகாப்பு வலயம்

# ஜனாதிபதியின் உத்தரவுக்கு எதிராக நீதிமன்றத்தில் மனு

கொழும்பு, ஒக். 2

கொழும்பில் அதி உயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதி வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறுகோரி, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் சிரேஷ்ட சட்டத்தரணி சுதத் விக்ரமரத்ன ஆகியோர் உச்ச நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்றை சட்டத்தரணி சம்பத் விஜேவர்த்தன ஊடாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை தாக்கல் செய்துள்ளனர்.

மனுவின் பிரதிவாதிகளாக பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரத்ன, பொலிஸ்மா அதிபர் சந்தன விக்கிரமரத்ன, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 19, 21 மற்றும் 22இனை மீறுவதாகவும், இது சர்வதேச மன்றங்களில் நீண்டகால விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, உயர் பாதுகாப்பு வலய ஆணை செல்லுபடியற்றது என்றும் அரசமைப்பின் கீழ் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் அறிவிக்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-14)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## செயலிழந்த மின்பிறப்பாக்கி இரு வாரங்களில் இயங்கும்

### மின் உற்பத்தி நிலையத்தின் பொறியியலாளர்கள் நம்பிக்கை

கொழும்பு, ஒக். 2

நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் செயலிழந்திருந்த மூன்றாவது மின்பிறப்பாக்கி, எதிர்வரும் இரு வாரங்களில் தேசிய மின் உற்பத்திக் கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளப்படும் என மின் உற்பத்தி நிலைய பொறியியலாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில் பொறியியலாளர்கள் தெரிவித்ததாவது:

நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மூன்றாவது மின்பிறப்பாக்கி செயலிழந்தது. அதன் திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்படாது இருக்கும் பட்சத்தில் மின் பிறப்பாக்கியை தேசிய மின் பிறப்பாக்கி கட்டமைப்பில் இணைத்துக் கொள்ள முடியும். இதன் மூலமாக 270 மெகாவாட்ஸ் தேசிய மின் உற்பத்தி கட்டமைப்பில் கிடைக்கும் - என்றனர். (ம-14,இ)

# முதியோரை புறந்தள்ளும் வாழ்க்கை வாழ்வில்லை!

## இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ். மாவட்ட கிளைத் தலைவர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக். 2**

**பெற்றோரையும் முதியோரையும் புறந்தள்ளிவிட்டு வாழும் வாழ்க்கை ஒரு வாழ்வேயில்லை. இதை இளைய சமூகம் புரிந்துகொள்ள வேண்டும் என்று இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட கிளைத்தலைவர் பாலகிருஷ்ணன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

கோப்பாய் மத்தியிலுள்ள நவமங்கை நிவாசத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற முதியோர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், எந்தத் துன்பங்கள் வந்தாலும் நாங்கள் குழந்தைகள் பேரப்பிள்ளைகளுடன் குடும்பத்திலேயே வாழ வேண்டும் என்றுதான் மூத்தோர் விரும்புகின்றனர். தற்போதைய இளைஞர் சமுதாயம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும், 'எங்களை அன்பு பாராட்டி நல்வழிப்படுத்தி பாலூட்டி வளர்த்த தாயையும் தகப்பனையும் முதியோர் இல்லத்துக்கு அனுப்பிவிட்டு வெளியிலே அவர்களை கலைத்துவிட்டு நாம் சந்தோசமாக வாழ்வதென்றால் அது ஒரு வாழ்க்கையா?' என அவர்கள் சிந்திக்கவேண்டும். ஆகவே, தற்போது வளர்ந்து வரும் இளைய சமுதாயம் பெற்றோர், உறவினர்களை வீடுகளில் இருந்து பராமரிக்க முன்வரவேண்டும் - என்றார்.

(ம-14,27)

# கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.280க்கு கோதுமை மா

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணத்திலுள்ள அநேகமான கூட்டுறவுச் சங்கங்களில் பங்கீட்டு அட்டைக்கு கிலோ 280 ரூபா வீதம் 2 கிலோ கோதுமை மா வழங்கப்படுகின்றது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கோதுமை மா வழங்கப்பட்டு வருவதால், விநியோகமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை தனியார் வர்த்தக நிலையங்களில் கோதுமை மா கிலோ 420 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம-14,17)

# மருத்துவமனையில் மோ.சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் கடந்த வியாழக்கிழமை மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டுள்ளது. மருத்துவமனை உணவகத்துக்கு சிற்றுண்டிப் பொருள்களை எடுத்துச் சென்ற ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திருடப்பட்டது. உணவகத்துக்கு சிற்றுண்டிப் பொருள்களை வழங்கிவிட்டு, மோட்டார் சைக்கிள் நிறுத்திய இடத்துக்கு வந்த வேளை, மோட்டார் சைக்கிள் காணாமல்போனது தெரியவந்தது. அதனையடுத்து இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்திடமும் பொலிஸாரிடமும் முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(ம-14,17)


**வேலை ஆட்கள் தேவை**

நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள இனிப்புத் தொழிற்சாலைக்கு வேலைக்கு பெண்கள் தேவை

**077 969 3210**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இருபாலையில் 02பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

**0767558606**

**காணி விற்பனைக்கு**


யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- A09 வீதியில் இருந்து 200m தூரம்
- 20 அடிப்பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 லட்சம் ரூபா மட்டும்.
- பார்வையிடும் நேரம் காலை 09.00 - மாலை 06.00

**077 8748135**


# மரண அறிவித்தல்

தோற்றம் 21 . 01 . 1935



மறைவு 30 . 09 . 2022

## ஐயம்பிள்ளை சின்னையா

**(ஓய்வுநிலை அதிபர்)**

விடத்தற்பளையை பிறப்பிடமாகவும் கச்சாய் வீதி கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயம்பிள்ளை சின்னையா (ஓய்வுநிலை அதிபர்) அவர்கள் நேற்று முன்தினம் (30.09.2022) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் விடத்தற்பளை காலஞ்சென்ற ஐயம்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், காலஞ்சென்ற குலசேகரம் பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், சுகுணசோதி (ஓய்வுநிலை ஆசிரியை) அவரது அன்புக் கணவரும், அமரர் சி.சிதம்பரம் (அன்னம்), ஐ.குமாரசிங்கம் (ஓய்வுநிலை அதிபர்), அமரர் செ.லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், கலையரசி (நோர்வே), Dr.சுமதி (இளைப்பாறிய பல் வைத்தியர்), கலைமதி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குகதாசன் (கொடிகாமம்), குகராஜ் (நோர்வே), காலஞ்சென்ற பத்மநாதன் (நோர்வே), மதிரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அஞ்சலி, அர்ச்சனா, சிந்துஜன், பவித்ரா, முரளி, பிரசாத், நேகா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், றியாவின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பாலாவித்தாள் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: மருமக்கள்**
**S.குகதாசன்**
**செ.மயூரன்**
**(சாவகச்சேரி பிரதேச சபை உப தவிசாளர்)**

**தொலைபேசி:**
**077 4438 663, 021 205 0350**
**077 358 1007**

(CR 38178) 1/6

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 04 . 1939



இறப்பு 01 . 10 . 2022

## அருளானந்தம் செசிலியம்மா (மணி)

தவசிகுளம் கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருளானந்தம் செசிலியம்மா நேற்று (01.10.2022) சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் ஞானப்பிரகாசம் மரியமாகிறேற் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற அருளானந்தத்தின் மனைவியும், ஞானஜெயசீலன், ஜெசின்ராணி ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரதிதேவி, மரியதாஸ் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பிலோமினா, ஜெயம்மா, காலஞ்சென்ற அல்பிறேற் அன்னம்மா, காலஞ்சென்ற சூசைநாதன், லூர்துமலர், அன்ரன் திரேசம்மா, சிறில் ஆனந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானப்பிரகாசம், சொலமன், மரியம்மா, யோசுவா, மதுரம், கிருஸ்ணமூர்த்தி, தேவி, செல்லத்துரை, ஜெசிந்தா ஆகியோரின் மைத்துனியும், விஜி, அமலோ, றஜீவன் ஆகியோரின் பேர்த்தியும், மிதுர்சன், திலுக்சன் அபிசாளினி, சுகன்ஜா, சுலக்ஷனா சுஜாஸ்னா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித காணிக்கை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 21055) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம் 15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா? ➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா? ➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா? ➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை

இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

CS 36443

### உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்பு கூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை, பால்மா என்பன விற்பனைக்குண்டு**

**கருமை நிறம் நீங்க வேண்டுமா?**

**077 210 6155  221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.**

## கணபதீஸ்வர குருகுலம்

**வேத சிவாகம சம்ஸ்கிருத வகுப்புக்கள்**
**புதிய மாணவர் அனுமதி 2022 / 23**

நல்லூர், வித்யாசாகர நியாய சிரோமணி **பிரம்மஸ்ரீ கி.சுப்பிரமணியசாஸ்திரிகளின்** பரிபூரண ஆசியுடன் அந்தணச் சிறார்களுக்கான புதிய மாணவர் அனுமதியும் நாள் வகுப்பும் **சுபகிருது வருடம் விஜயதசமி நாளில் (05.10.2022) புதன்கிழமை அதிகாலை 5.30 மணி முதல் 6.30 மணி வரையும், மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரையும் நடைபெறும்.**

வயதெல்லை 5 – 12 வயதுக்குட்பட்டவர்கள் மட்டும்.

**பிரம்மஸ்ரீ சு. நவநீதகிருஷ்ணன்**
**முகவரி : கணபதீஸ்வர குருகுலம், "ஹேரம்ப பவனம்"**
**93, கோவில் வீதி, நல்லூர். தொ.பே. 077 028 0017**

(CS 46865) (3/6)

## சமையல் நிபுணர் உடன் தேவை

லண்டன் மாநகரில் விரைவில் திறக்கப்படவுள்ள இலங்கை, இந்திய உணவகம் ஒன்றுக்கு சமையல் நிபுணர் உடன் தேவை.

**Work permit + flight ticket** + கவர்ச்சிகரமான சம்பளம். (நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்)

**தகுதிகள்:**
- சமையல்கலையில் தொழில்தேர்ச்சியும், அனுபவமும்
- ஆங்கில மொழித்தேர்ச்சி
- 20-45 வயதுக்குட்ட இருபாலாரும்

தகமையும் ஆர்வமும் கொண்டோர் நாளை திங்கட்கிழமை 03.10.2022 மு.ப. 10.30 மணிக்கு உரிய சான்றிதழ்கள், ஆவணங்களோடு நேர்முகத்தேர்வுக்கு கீழ்வரும் முகவரியில் தோற்றவும்.

**COSY Hotel & Restuarant**
இல.272, ஸ்ரானலி வீதி,
யாழ்ப்பாணம்.
**தொ.பே:**
**021 222 7100, 021 222 5899, 0764646139**

(CR 38180) 1-6

# வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஒக். 2

வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். இந்தப் பகுதிகளில் மழைக்கும் சாத்தியம் காணப்படுகின்றது - என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலை ஓரளவு அதிகரிக்கும். மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும். சில இடங்களில் 75 மில்லிமீற்றர் வரையில் ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும். வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யும். ஊவா மாகாணம் மற்றும் அம்பாறை மாவட்டத்தின் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 50 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும். புத்தளத்திலிருந்து கொழும்பு ஊடாக மாத்தறை வரையான கடற்பரப்புகளில் அவ்வப்போது மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழை, பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ள போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள் - என்றுள்ளது.

(ம-14,இ)



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

யாழ். **கலாலயா** பயிற்சியகம்

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)**

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!

**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

*கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling அழகுக் கலை*, **Facials**, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல் போன்ற பயிற்சிகள்...



கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு புதிய பிரிவுகள்
05.10.2022 புதன் (விஜயதசமி) அன்று ஆரம்பமாகின்றன

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

## பால் கறக்கும் மாடுகள்

# விற்பனைக்கு

Jersey/Friesian கலப்பின மாடுகள்
ஒரு புகழ்பெற்ற பால் பண்ணையில்
உடனடியாக விற்பனைக்கு உள்ளது.




**076 917 6311 / 077 678 7484**

## வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகு வழங்கும் யாழ் மாவட்ட இளைஞர்களுக்கான இலவச சதுரங்க, பூப்பந்தாட்டப் பயிற்சி வகுப்புக்கள்





வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் வல்லமைகாண் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் **பாடசாலைக் கல்வியை முடிவுறுத்திய** இளைஞர், யுவதிகளுக்கான **சதுரங்க** மற்றும் **பூப்பந்தாட்ட** இலவசப் பயிற்சி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

**தினங்கள்:** சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறை தினங்கள்

**வயதெல்லை** : 19 வயதுக்கு மேல்

**விண்ணப்ப முடிவுத்திகதி - 21.10.2022** வெள்ளிக்கிழமை

**யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்**

**வகுப்புக்கள் யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் இடம்பெறும்.**

**பங்குபற்றுநர்களுக்கு பயிற்சி நிறைவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**பங்குபற்றுநர்கள் தமக்கான விளையாட்டு உபகரணங்களை தாமே கொண்டுவருதல் வேண்டும்.**

**பயிற்சி நிறைவில் போட்டிகள் நடாத்தப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்**

விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதும் வார நாளொன்றில் கடமை நேரத்தில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

**விண்ணப்பப் படிவத்தின் மென்பிரதிகள் பெற்றுக்கொள்ளக்கூடிய இணையத்தளங்கள்**

**http://edumin.np.gov.lk**

**https://bit.ly/3SsbJq3**

**தொடர்பு இலக்கம்** - 021 222 2203 (அரச வேலை நாட்களில் காலை 9:00 - மாலை 4:00 வரை)

இறுதித்திகதி வரை காத்திராது இன்றே விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எமக்கு அனுப்பி வையுங்கள்.

**அனுப்பி வைக்கவேண்டிய முகவரி**

உதவிச் செயலாளர்
இளைஞர் விவகார அலகு
கல்வி அமைச்சு, வ.மா.
செம்மணி வீதி,
நல்லூர்.
யாழ்ப்பாணம்

FB Page: http://www.facebook.com\youthnorth

இ. வரதீஸ்வரன்,
செயலாளர்
கல்வி அமைச்சு, வ.மா.

(CR 38175) (3-6)

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு

- மழை காலங்களில் உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு.
- வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.
- உத்தரவாதம் தரும் பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.
- போலி இரசாயனத்துடன் போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம் உத்தரவாதம் தரும்பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

**1 சதுர அடி 150/= இல் இருந்து**

**FINEX**

இரசாயனப் பொருள்களை விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்

**North and East Engineering**
**55 Stanly Road, Jaffna, Srilanka**
**021 222 2363, 077 524 4177**
**077 232 3000**

(cs 20921) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# சிறுவர்களுக்கு ஓர் உலகம்!

நாட்டிலுள்ள அனைத்துச் சிறுவர்களுக்கும் ஊட்டச்சத்தான உணவு கிடைக்கச் செய்ய வேண்டியதும், அவர்களின் போசணை மட்டத்தை மேம்படுத்த வேண்டியதும் ஜனாதிபதி என்ற ரீதியில் தனது கடமை என்பதை வெளிப்படையாக ஏற்றிருக்கும் ரணில் விக்கிரமசிங்க, இது தொடர்பில் தனது அரசாங்கம் தொடர்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்றும் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையில் பொருளாதார இடர்பாடு ஏற்பட்ட நாள்முதல் இலங்கைச் சிறுவர்களின் போசணை மட்டம் தலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. சிறுவர்கள் மற்றும் குழந்தைகள் போசணைக் குறைபாடு உள்ளவர்களாக மாறிக்கொண்டிருக்கின்றனர் என்றும் இந்த நிலைமை இன்னுமின்னும் மோசமாகும் என்பதும் அனைத்துத் தரப்பினராலும் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டே வந்திருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, இலங்கையிலுள்ள குழந்தை நல அமைப்புக்கள், மருத்துவத் துறையினர் மட்டுமல்லாமல் சர்வதேசமும் இது தொடர்பான தொடர்ச்சியான எச்சரிக்கையை விடுத்து வருகின்றதொரு பின்னணியில், சிறுவர்களின் போசணை இனிவரும் நாள்களில் மேம்படுத்தப்படும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கின்றார் ஜனாதிபதி.

ஜனாதிபதியுடைய இந்த அறிவிப்பு வரவேற்கக் கூடியதுதான். வழக்கமான பூசிமெழுகலாக அல்லாமல் இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் ஏற்பட்டுள்ள இந்தப் பேராபத்தை வெளிப்படையாக ஏற்றமைக்காகவேனும் அவரைப் பாராட்டலாம். ஆனால், வெறும் சம்பிரதாயமான வெற்று அறிக்கையாக அவருடைய இந்தக் கருத்துக்கள் அமைந்துவிடக் கூடாது என்பதுதான் இங்கே காலத்தேவையானதும் - கோடிட்டுக் காட்டப்படவேண்டியதுமாகும்.

ஜனாதிபதியாக ரணில் பொறுப்பேற்ற பின்னர் சுமார் 10 லட்சம் மாணவர்களுக்கு காலைவேளை உணவூட்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும்கூட - மாணவர்கள் மற்றும் குழந்தைகள் எதிர்கொண்ட போசணைக் குறைபாட்டுடன் ஒப்பிடுகையில், இந்த நடவடிக்கை 'யானைப் பசிக்கு சோளப்பொரி' போன்றதாகத்தான் அமைந்திருக்கின்றது. போசணை மேம்பாடு தொடர்பான தேவை வேறொரு பரிமானத்தில் வியாபித்திருக்க , அந்தத் தேவையை நிவர்த்தி செய்வதற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் பிறிதொரு தளத்தில் மெல்லமெல்ல நகர்த்தப்படுகின்றன. இந்தக் குறை நிவர்த்தி செய்யப்பட்டு 'போசணை மேம்பாடு' தொடர்பான திட்டங்கள், முழு வீச்சிலும் துரித கதியிலும் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதுதான் வறிய மற்றும் நடுத்தர மக்களின் எதிர்பார்ப்பு.

அதேநேரம், போசணைக் குறைபாட்டுக்கு இணைந்தாற்போல் போதைப்பொருள் பாவனையும் இலங்கைச் சிறுவர்களின் அழகிய உலகத்தையும் அதன் இருப்பையும் அண்மைக்காலமாக கேள்விக்கு உட்படுத்தி நிற்கின்றது. உயிர்கொல்லிப் போதைப்பொருளான ஹெரோய்ன்கூட மிக இலகுவான அணுகல்கள் மூலம் பெற்றுவிடக்கூடிய வகையில் சமூக மட்டத்தில் புரையோடிப்போயுள்ளது. போசணை மட்டத்தை உயர்த்த நினைப்பதைப்போல, போதை என்னும் பேரரக்கனுக்கு எதிராகவும் ஜனாதிபதி ரணில் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். விசேட செயலணிகள் சிறப்புக் குழுக்கள் மூலம் இந்த விஷச் செடிகளை வேரறுப்பதன் மூலம்தான் சிறுவர்களின் உலகை மேலும் அழகாக்கலாம். அந்த அழகிய உலகம்தான் நாட்டின் எதிர்காலத்தையும் இருப்பையும் தீர்மானிக்கும்.

## நாளொரு நல்வார்த்தை

"பெருந்தன்மையான குணம் எல்லா நற்குணங்களுக்கும் ஆபரணம் போன்றது"

- அரிஸ்ரோட்டில்



# கடலட்டைப் பண்ணைக்கு எதிராக மக்கள் போராட்டம்

## பூநகரியில் சம்பவம்

**கிளிநொச்சி, ஒக். 2**

**பூநகரி - கிராஞ்சி இலவன்குடா கடற்பகுதியில் பாரம்பரியமாக சிறகுவலை தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள், அந்தப் பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுமுன்தினம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

குறித்த போராட்டம் தொடர்பில் மீனவர்கள் தெரிவித்ததாவது:-

எமது இலவன்குடா கடற்பரப்பில் சிறகுவலைத் தொழில்முறையின் கீழ் நீண்டநாள்களாக நாம் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். பெண் தலைமைக் குடும்பங்கள் பலவும் இந்தத் தொழிலைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் எமது வாழ்வாதாரத்தைச் சீர்குலைக்கும் வகையில் தற்போது கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

எமது வாழ்வாதாரத்தை அழிக்கும் இந்த நடவடிக்கைகளை நாம் கடுமையாகக் கண்டிப்பதுடன் இதற்கு அதிகாரிகள் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு எமக்கு தீர்வைத் தரவேண்டும் என்றும் கோருகின்றோம் - என்றனர். (ம-113)

# நாடு மீண்டெழுவதற்கு பொதுத்தேர்தல் தேவை

## உதய கம்மன்பில வேண்டுகோள்

கொழும்பு, ஒக். 2

நாட்டை வீழ்ச்சிப் பாதையிலிருந்து முன்னோக்கிக் கொண்டு செல்ல முதலில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும் இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த அரசின் போக்குச் சரியில்லை. அது வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது. நாட்டில் அரசியல், பொருளாதார உறுதித்தன்மை இல்லை. எந்தப் பிரச்சினைகளுக்கும் இந்த அரசால் தீர்வுகாணமுடியாது. இது நிலையான அரசு இல்லை. அதுதான் அதிலிருந்து நாம் வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுகின்றோம். நாடு மீண்டெழ வேண்டுமெனில் நிலையான அரசு ஆட்சியில் இருக்கவேண்டும்.



எனவே, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முதலில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும். அப்போதுதான் மக்களின் தற்போதைய மனநிலையை அறிந்து கொள்ள முடியும் - என்றார். (ச-22)

நாளை

03.10.2022

திங்கட்கிழமை

புரட்டாதி - 16

சுபநேரம் : 12.02 - 01.32

ராகுகாலம்: 07.32 - 09.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக பங்களிப்பு வரியால் பாண் விலை உயர்வடையும்!

## பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக். 2**

**அரசாங்கத்தால் புதிதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள சமூக பாதுகாப்புப் பங்களிப்பு வரியால் பாண் உள்ளிட்ட வெதுப்பகப் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

சமூக பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கும் வகையில் 140 பில்லியன் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் முகமாக அரசாங்கத்தால் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி, 2022ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்படி நேற்று முதல் இந்த வரி நடைமுறைக்கு வந்துள்ளது. இந்த வரிவிதிப்பால் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் உயரவுள்ளன என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்தப் பின்னணியிலேயே இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளது. (ச-இ)

# பொலிஸாரால் தேடப்பட்டவர் ஹெரோய்னுடன் கைதானார்!

## இளவாலையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 2

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தேடப்பட்டுவந்த சந்தேகநபர் ஒருவர் உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார் என இளவாலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வடலியடைப்புப் பகுதியில் இரண்டு வீடுகள் மற்றும் கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்ட குற்றச்சாட்டிலேயே அதேபகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் மற்றும் 55 ஆயிரம் ரூபா பணம் என்பன மீட்கப்பட்டுள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரை மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27,26)

# மடு கிராமங்களுக்குள் யானைகள் அட்டகாசம்

## மக்கள் அச்சத்தில்

மன்னார், ஒக். 2

மடு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பெரியபண்டிவிரிச்சான், சின்ன பண்டிவிரிச்சான் கிராமங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்று அந்தப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தின் நடுப்பகுதிக் காணிகளுக்குள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யானைகள் உட்புகுந்து அட்டகாசம் செய்துள்ளன. அதனையடுத்து வன உயிரிகள் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இணைந்து அந்தப் பகுதி இளைஞர்கள், யானைகளைக் காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதேவேளை கடந்த செப்ரெம்பர் மாதம் சின்னப்பண்டிவிரிச்சானில் காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி நபரொருவர் உயிரிழந்தார். அத்துடன் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் கடந்த மூன்று நாள்களாக வயல் காணிகளுக்குள் யானை புகுந்து பெறுமதிமிக்க மரங்களை சேதப்படுத்தியுள்ளது.

குறித்த கிராமங்களில் யானைகளின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றதால் யானை வேலி போன்றவற்றை அமைத்தும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அந்தக் கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-56,213)


# ரயில் கடவை சீரமைப்புக்காக வவு. மன்னார் வீதி மூடுகை

வவுனியா, ஒக். 2

வவுனியா மன்னார் பிரதான வீதியில் காணப்படும் ரயில் கடவையை சீர்செய்யும் வேலைத்திட்டம் காரணமாக, நேற்று தொடக்கம் இன்று இரவு வரை வீதி மூடப்பட்டுள்ளது.

இதனால் மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகாத வகையில் மாற்று வீதிகளான ரயில் நிலைய வீதி, நகரசபை நூலக வீதி, அரச விடுதி வீதி போன்ற வீதிகளைப் பயன்படுத்துமாறு இலங்கை ரயில்வே திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-14,18)





# சாவ. மருத்துவமனை விபத்து சிகிச்சைப் பிரிவு எதிர்வரும் 10 இல் திறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 2

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் நிர்மாணிக்கப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் எதிர்வரும் 10ஆம் திகதி முற்பகல் 9.30 மணிக்கு பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவைக்கப்படவுள்ளன.

மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் சி.குமரவேள் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்திக் கழக ஐக்கிய இராஜ்ஜியம் கிளையின் தலைவர் மருத்துவர் ஆ.புவிநாதன், கொழும்பு தெற்கு றோட்டறிக் கழக சமூக சேவைகள் நிகழ்ச்சித் திட்ட தலைவர் வே.ரமணா, கௌரவ விருந்தினர்களாக வடமாகாண சுகாதார, சுதேச மருத்துவ, நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள், அமைச்சின் செயலாளர் திருமதி ச.மோகநாதன், யாழ்.மாவட்டச் செயலர் க.மகேசன், தென்மராட்சி அபிவிருத்திக் கழகத் தலைவர் பேராசிரியர் க.கந்தசாமி, மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் டிலிப் எச். லியனகே, யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா மருத்துவமனை பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-9)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** வரவு அதிகரிக்கும் என்றாலும் திடீர் செலவால் சங்கடம் அடைவீர்கள். உழைப்பின் வழியே உங்கள் செயல்களில் சாதக நிலை காண்பீர்கள். ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**இடபம்:** சொத்து விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை இன்று முடிவுக்கு வரும். குழந்தை பாக்கியத்தை எதிர்பார்த்தவர்களுக்கு நல்ல தகவல் வரும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த வருவாய் வரும். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட சிக்கல் தீரும். பணியாளர் ஆதரவுடன் வியாபாரத்தை விருத்தி செய்வீர்கள். வருமானம் கூடும். முயற்சியில் தடை விலகும்.

**கடகம்:** முயற்சியில் சில தடைகள் ஏற்படும். சட்ட சிக்கல்களை சந்திக்க நேரிடலாம். குரு அருளால் சிந்தித்து செயற்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** துணிச்சலுடன் செயற்பட்டு லாபம் காண்பீர்கள். எண்ணம் நிறைவேறும். மற்றவரின் விமர்சனத்தை ஒதுக்கி வைத்து செயற்படுவீர்கள். நினைத்ததை சாதிப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த தகவல் வரும். வங்கியில் விண்ணப்பித்த கடன் வந்து சேரும். [illegible] நிறைவேறும். வருமானத்தில் ஏற்பட்ட தடை விலகும். எண்ணம் நிறைவேறும்.

**துலாம்:** உங்கள் கவனக்குறைவால் முயற்சி நிறைவேறாமல் போகும். நிதானம் தேவை. செயல்களில் தடுமாற்றம் அடைவீர்கள். எதிர்பார்த்த ஒன்றில் தாமதம் ஏற்படும். செல்வாக்கு உயரும்.

**விருச்சிகம்:** நீண்டநாள் முயற்சி நிறைவேறும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தம்பதிக்குள் ஏற்பட்ட பிரச்சினை விலகும். ஒருவரை ஒருவர் புரிந்து செயற்படுவீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த பணம் வரும். பழைய கடன்களை அடைப்பீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். பணியாளர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும்.

**மகரம்:** வேலைக்காக முயற்சி செய்தவர்களுக்கு எதிர்பார்த்த வாய்ப்பு தேடி வரும். தொழிலை விரிவு செய்வதற்காக எதிர்பார்த்த தொகை கைக்கு வந்து சேரும். எதிர்பார்த்ததை அடைவீர்கள்.

**கும்பம்:** முயற்சி ஒன்று நிறைவேறும். மகிழ்ச்சியான நிலை ஏற்படும். செயலில் சிரமம் ஏற்பட்டாலும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். வரவு கூடும். வரவேண்டிய பணம் இன்று வந்து சேரும்.

**மீனம்:** புதிய முயற்சி இன்று வேண்டாம். செயல்கள் தாமதமாகும். எதிர்பார்ப்பு தள்ளிப்போகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. வழக்கமான பணிகளிலும் கவனம் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பாவனையை கட்டுப்படுத்த பிரதேசரீதியில் வேலைத்திட்டம்

## வடமாகாண ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 2**

**உயிர்கொல்லியான ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பிரதேசங்கள் ரீதியில் விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.**

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த பிரதேச மட்டம், மாவட்ட மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அனைத்துத் தரப்பினரதும் பங்களிப்பு அவசியம். போதைப்பொருளைக் கட்டுக்குள் கொண்ட அனைவரதும் ஒத்துழைப்பை வழங்குவதுடன் பொறுப்பானவர்கள் பொறுப்பை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தற்போது பிரதேச மட்டத்தில் போதைப்பொருள் பாவனை அதிகமாகக் காணப்படுகின்ற பிரதேசங்களை அடையாளப்படுத்தி பிரதேச செயலாளர்களுடன் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன், பாதுகாப்புத் தரப்பினருடன் விசேடமாக கலந்துரையாடி அனைவரினதும் ஒத்துழைப்புடன் போதைப்பொருள் தடுப்பு முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும் - என்றார். (ச-20)

# தொழில் தேடுவோருக்கு விண்ணப்பங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ்ப்பாண மாவட்ட மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களத்தால் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேசசெயலகப் பிரிவுகளிலும் உள்ள தொழில் தேடுவோர் மற்றும் புதிதாக சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வம் கொண்டிருப்பவர்களைப் பதிவு செய்து வருகின்றது.

அதன் தொடர்ச்சியாக சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை மற்றும் வேலணை ஆகிய பிரதேசசெயலகப் பிரிவுகளில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளூடாகவும் பதிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை கிராம அலுவலர் அலுவலகத்திலும் மற்றும் பிரதேச செயலகத்திலும் பெற்றுக்கொள்ளமுடியும். அத்துடன் விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்தி எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அல்லது அதற்கு முன்பதாக கிராம அலுவலர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்கமுடியும்.

பதிவுகள் தொடர்பான மேலதிக விவரங்கள், வழிகாட்டுதல்கள் தேவைப்படுமிடத்து 021 2219359 என்ற அலைபேசியூடாகப் பெற்றுக் கொள்ளலாம். எனவே, தொழில் வாய்ப்புக்காகக் காத்திருக்கும் இளைஞர், யுவதிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பயனடைய வேண்டும் என்று யாழ்.மாவட்டச்செயலர் க.மகேசன் கேட்டுக் கொண்டுள்ளார். (ஒ-14)

# யோகா கற்கைநெறி புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 2

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவரும் யோகக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் 8ஆம் திகதி நல்லூர்க்கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணிமுதல் 8மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்துகொள்ளலாம்.

மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சிலோ அல்லது அதன் இணையத்தளத்திலோ விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 05ஆம் திகதிக்கு முன்னர் கல்வி அமைச்சு வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு தபால் மூலமோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கலாம் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-23)

# கரைச்சி பிரதேசசபையில் முறைகேடு இடம்பெற்றமைக்கான ஆதாரமில்லை

## வடக்கு ஆளுநர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக். 2

கரைச்சி பிரதேசசபையில் முறைகேடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

கரைச்சி பிரதேசசபையின் தற்போதைய நிர்வாகத்தில் பல ஊழல் முறைகேடுகள் நடைபெற்றுள்ளமை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் கண்டறியப்பட்டு ஆளுநரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் அதற்குரிய விசாரணைகள் அரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் கடந்த ஏப்ரல் மாதம் 7 ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் செய்தி வெளியாகியிருந்தது.

எனினும், அந்த விடயம் ஆராயப்பட்டு உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுச் செயலாளரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கரைச்சி பிரதேசசபையின் பொதுச் சந்தைக்குள் கடைகள் வழங்கப்பட்டமை தொடர்பில் ஊழல் இடம்பெற்றதா? என்பதைக் கண்டறிவதற்காக பொருத்தமான விசாரணை ஒன்று மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

மேலும், இதர விடயங்கள் கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் கரைச்சி பிரதேசசபைக்கு இடையிலான உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பானவை. எனினும், பெறப்பட்ட அறிக்கையின் பிரகாரமும் இணைப்பு ஆவணங்களின் அடிப்படையிலும், கரைச்சி பிரதேசசபையில் முறைகேடுகள் இடம்பெற்றமைக்கான ஆதாரங்கள் எவையும் காணப்படவில்லை - என்றுள்ளது. (ஒ-14)

# சவுக்கு மரம் கடத்தல்; 2 பெண்கள் கைது!

**யாழ்ப்பாணம், ஒக். 2**

மணற்காடு சவுக்கங்காட்டில் சவுக்கு மரங்களை வெட்டிக் கடத்த முற்பட்ட குற்றச்சாட்டில் இரண்டு பெண்கள் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

மணற்காடு சவுக்கங்காட்டில் சவுக்கு மரங்கள் வெட்டப்பட்டுக் கடத்தப்படுவதாக பருத்தித்துறை பொலிஸ் நிலைய விசேட குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றது.

சவுக்கு மரங்களை முழு மரங்களாக வெட்டி 7 சைக்கிள்களில் கடத்த முற்பட்ட வேளை, பருத்தித்துறைப் பொலிஸாரால் மரக்கடத்தல் முறியடிக்கப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்களை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர். (ஒ-14-27)

# யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவு கட்டடம் மீள்புனரமைத்து திறப்பு



யாழ்ப்பாணம், ஒக். 2

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவு கட்டடத் தொகுதி திறப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது பாடசாலை அதிபர் வண.கலாநிதி டி.எஸ். சொலமன் ஆரம்பப் பிரிவு கட்டடத் தொகுதியை திறந்து வைத்தார்.

பாடசாலையின் அனைத்து பழமைவாய்ந்த கட்டடத் தொகுதிகளும் கல்லூரியின் அமெரிக்க தர்மகர்த்தா நிதியத்தால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள நிலையில் முதலாவது கட்டமாக கல்லூரியின் ஆரம்பப்பிரிவு திறந்துவைக்கப்பட்டது. (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடி நேரத்திலும் அமெ. முதலீடு செய்யும்

## அமெரிக்கத் தூதுவர் உறுதி



கொழும்பு, ஒக். 2
தற்போதைய நெருக்கடி நேரத்தில் இலங்கை மக்களுக்காக அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்யும் என்று உறுதியளித்துள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங்.

கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தைத் திறந்து வைப்பதன் மூலம் இலங்கையர்களின் கனவுகளை நனவாக்க அமெரிக்கா தனது கரங்களை நீட்டியதுடன், மகிழ்ச்சியான நட்புறவையும் உறுதிப்படுத்தியது. அமெரிக்காவும் இலங்கையும் நண்பர்கள். இலங்கையர்களுக்கு இது ஒரு சவாலான நேரமாகும்.

எனவே, இந்த சவாலான நேரத்தில் இலங்கையில் உள்ள மக்களுக்காக அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்து வருகின்றது. இந்த நிலை இனியும் தொடரும் - என்றார். (ஒ-14-இ)



கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் 70 ஆவது ஆண்டு நிறைவும் பரிசில் நாள் நிகழ்வும் அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் பொன்சபாபதி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டதுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அத்துடன் விருந்தினர்கள் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (ய-159)



கராத்தேப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள் 2 தங்கப்பத உட்பட 12 பதக்கங்களைப் பெற்று மாகாண மட்டத்தில் சாதனை படைத்து தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளனர். (ச)



## நிவாரணம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக். 2
முருகமூர்த்தி வீதி, வண்ணார்பண்ணையில் அமைந்துள்ள ஐங்கரன் சனசமூக நிலைய ஏற்பாட்டில், திருநாவுக்கரசு சூரியகுமாரின் நிதிப்பங்களிப்பில் பெண்கள் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நிவாரணப் பொருள்கள் ஐங்கரன் சனசமூக நிலையத்தில் அண்மையில் வழங்கப்பட்டன. (ஒ-14)



சமூக பாதுகாப்பு சபையில் இணைந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களில் 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு மாணவருக்கும் தலா 5000 ரூபா கொடுப்பனவு மன்னார் மாவட்ட செயலகத்தில் மாவட்டச் செயலர் திருமதி. ஸ்ரான்லி டிமெலால் அண்மையில் வழங்கப்பட்டது. (ய-60)



## நினைவுதினம் கடைப்பிடிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2
விமானக் குண்டு வீச்சில் பதுங்கு குழிக்குள் பலியான 17 பேரின் 30 ஆவது ஆண்டு நினைவுதினம் சங்கத்தானையில் உள்ள அவர்களது நினைவு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

1993 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி அன்று புலோப்பளையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தின் எதிரொலியாக, சாவகச்சேரி பகுதியில் விமானம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் அங்குள்ள மர அரிவு ஆலையின் பதுங்கு குழி மீது குண்டு வீழ்ந்து வெடித்ததில் அதனுள் இருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 17 பேர் உயிரிழந்தனர்.

இதனை நினைவு கூறும் வகையில் சங்கத்தானை சாரதா சனசமூக நிலையத்திலிருந்து சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவுகள் தீபமேந்தி சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு ஊர்வலமாக வந்து அங்குள்ள நினைவு மண்டபத்தில் அஞ்சலி செலுத்தினர். (எ-14-9)



## பொதுநோக்கு மண்டபம் மக்கள் பாவனைக்கு

வவுனியா, ஒக்.2
வவுனியா - பாரதிபுரம் கிராமத்தில் பொது நோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு அண்மையில் கையளிக்கப்பட்டது.

பாரதிபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட அகில இலங்கை இளைஞர் முன்னணியின் தலைவரும், பிரதேசசபை உறுப்பினருமான இராசையா விக்டர்ராஜ் மற்றும் ஏனைய விருந்தினர்களால் பொதுநோக்கு மண்டபம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது. இதன்போது கருத்துத் தெரிவித் இளைஞர் முன்னணியின் தலைவர், குறித்த பகுதியில் சீரற்றுக் காணப்படும் வீதிகளை செப்பனிடுவதற்கு பிரதேசசபையானது வாகனங்களைத் தந்துதவுமாக இருந்தால் அதற்கான ஊதியமின்றிப் பெற்றுக்கொடுத்து அதனை செப்பனிடுவதற்கு தாம் தயாராக விருப்பதாக கூறினார். (ஒ-14-110)



உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு 'கடல் வளத்தை காப்போம்' என்ற தொனிப்பொருளில் வடமாகாண சுற்றுலா பணியகத்தின் ஏற்பாட்டில் வேலணை சாட்டி சுற்றுலா கடற்கரையோர தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. (ய-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்கள வகுப்பு

மாணவர்கள், தொழில்புரிபவர்களுக்கான சிங்கள வகுப்புக்கள் நேரடியாகவும், Online மூலமும் கற்பிக்கப்படும்.

**077 233 6267**

## வீடு வாடகைக்கு

கோவில் வீதி,
நல்லூரில் வீட்டின் மேல்மாடி
வாடகைக்கு விடப்படும்.

**070 643 3914**

## மணமகள் தேவை

யாழ். இந்து கொழும்புத்துறையை பூர்வீகமாக கொண்ட தற்போது லண்டன் PR உடைய 1984ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. **077 732 3585, 077 453 1364**

(CS 21046) (3/6)


# 8ஆம் ஆண்டின் நீங்கா நினைவலைகளில்...

## அமரர் சிவராசா நிசாந்த்

திதி: வளர்பிறை பூர்வபட்ச சப்தமி (02.10.2022)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 19 - 09 - 1985 | 01 - 10 - 2014 |



எங்கள் செல்வமே!
எங்கே உந்தன் மலர்ந்த வதனம்
மங்காப் புன்னகை கட்டழகு மேனி
ஏங்கித் தேடியே ஆண்டுகள் எட்டு ஆனதடா!
உம் பசுமை நினைவுகள் என்றும்
இதயமதில் நாதமாய் இசை மீட்டிட
உம் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்


என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

49/1 கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(CS 46864) (3/6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 - 01 - 1953 | 30 - 09 - 2022 |



## ஆசீர்வாதம் ஜேசுராஜா (யோகா)

கதிற்றல் வீதியைப் பிறப்பிடமாகவும், சென் பற்றிக்ஸ் வீதியையும், மணியம் தோட்டத்தையும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் ஜேசுராஜா (யோகா) கடந்த (30.09.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் - சின்னத்தங்கம் தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குருசுஇராயப்பு மற்றும் மலர் தம்பதியினரின் பாசமிகு மருமகனும், வனிதாவின் பாசமிகு கணவரும், றொபின்சன், றொபட், அனுசா, இனியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஹெரன், ஷிரானி, சுரேஷ் சசிகலா ஆகியோரின் மாமனாரும், அஜேஸ், அஸ்வன், ஆருசா, பிரனித், லாவண்யா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆலயத்தில் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

85/5 சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்

(CS46866) (3/6)

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 28 . 02 . 1965 | 26 . 09 . 2022 |



## தம்பு சுகன் (குழந்தை)

யாழ். அரியாலை கதிரவேலு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Bobigny ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு சுகன் (குழந்தை) அவர்கள் கடந்த (26.09.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு, செல்லம் (கொலண்ட்) தம்பதிகளின் பாசமிகு இளைய மகனும், விவேகானந்தன் பூர்ணாம்பிகை (இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், துஷியந்தி அவர்களின் அன்புக் கணவரும், அபிஷன், அஜிஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மோகன் (பிரான்ஸ்), ஜெகன் (குட்டி - பிரான்ஸ்), சுகிதா (இராசாத்தி - கொலண்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஜெனித்தா, வசந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், சுரேன் (றெக்ஸ் - கொலண்ட்), மயூரன் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிருஷாந்தி (நோர்வே) அவர்களின் பாசமிகு அத்தானும், சுஜிகரன் (நோர்வே), அவர்களின் அன்புச் சகலனும், மைதிலி (கனடா) அவர்களின் பாசமிகு சகோதரரும், வினோத், ரஜிதா, சாருஜன் ஹரிஷன், அகிஷன், மதுஷா, விதுஷன், பவிஷன், ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், மிதுஷன், ஜெருஷன், மெருஷ்கா, அனிஷ், தருஷன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் Funeraium 95 Rue Marcel Sembat, 93430 Vinetaneuse, France இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 21037) (3/6) **0775320845**

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09.08.1927 | 30.09.2022 |

## திரு. செல்லையா சின்னையா

(ஓய்வுநிலை உணவுத் திணைக்கள ஊழியர்)

சாவகச்சேரி வடக்கைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை கொழும்பை வதிவிடமாகவும் கொண்டிருந்த செல்லையா சின்னையா அவர்கள் கடந்த (30.09.2022) வெள்ளிக்கிழமையன்று கொழும்பில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்ற கதிரித்தம்பி - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் உமையம்மாவின் கணவரும் வசந்தகுமார் (ஓய்வுநிலை வானிலை அதிகாரி), மைதிலி (USA) ஆகியோரின் அன்புத் தந்தையம் Dr. பாலகிருஷ்ணன் (USA), விஜயநந்தினி (ஓய்வுநிலை ஆசிரியர் றோயல் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும் தங்கம்மா, திலகவதி (காலஞ்சென்றவர்கள்) மற்றும் சின்னம்மா, அன்னலக்ஷி, ஆச்சிப்பிள்ளையின் சகோதரரும் சம்பந்தபிள்ளை, கனகசபை (காலஞ்சென்றவர்கள்) மற்றும் புனிதவதியின் மைத்துனரும் Dr. அர்ச்சனா (USA), அகிலன் (USA), மதுசாயின் பாசமிகு பாட்டனாரும் சண்முகப்பிரியா, பிரியரஜனியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் நாளை (03.10.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரையும் பின்னர் நாளை மறுதினம் (04.10.2022) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 12.30 மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கிறோம்.

077 508 1630,
070 405 8791

தகவல்: மகன்
சின்னையா வசந்தகுமார்

(ACO 16417) (3/6)

## சேவைநலன் பாராட்டு விழா

யாழ்.ஒக். 2

கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலையில் கடந்த 12 ஆண்டுகளாக அதிபராகப் பணியாற்றிய அதிபர் ஆறுமுகம் தங்கவேலுவுக்கு சேவைநலன் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அமைந்துள்ள செல்வநாயகிதேவி அரங்கில் இடம்பெறவுள்ளது. ச-159)

## சிறுவர் தினமும் சின்னஞ்சூட்டலும்

யாழ்.ஒக். 2

பருத்தித்துறை வதிரி திரு இருதயக்கல்லூரியில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சிறுவர் தினமும் சின்னஞ்சூட்டும் நிகழ்வும் பாடசாலை மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் இடம் பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.நற்குணலிங்கம் கலந்துகொண்டு சர்வதேச சிறுவர் தினம் பற்றி சிறப்புரை ஆற்றவுள்ளார். (ம-14)

## கச்சாய் ம.வித்தியாலயத்தில் சிறுவர், முதியோர் நிகழ்வுகள்

யாழ்.ஒக். 2

கச்சாய் மகா வித்தியாலயத்தின் உலக சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் க.குணசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் பிரதம விருந்தினராக மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் ஓய்வுநிலை அதிபர் க.கந்தசாமி, கௌரவ விருந்தினர்களாக திருமதி பரமேஸ்வரி செல்லத்துரை, திருமதி நாகேஸ்வரி வல்லிபுரம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SLTC
Research University

# SLTC ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பாடநெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்தல்

நீங்களும் SLTC ஆராய்ச்சிப் பல்கலைக்கழகத்தின் பட்டப் பாடநெறிகளுக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரியாக அல்லது விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்ப்பவராக, க.பொ.த. உயர் தரத்தில் தோற்றியுள்ள, சகல பாடங்களிலும் சாதாரண சித்தியெய்தியுள்ள (S) அல்லது உயரிய பெறுபேறுகளைப் பெற்றுள்ள மாணவர் அல்லது மாணவியெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் நிலையத்துக்கு வருகை தந்து 2022/2023 கல்வியாண்டுக்காக நீங்கள் விரும்பும் பட்டப் பாடநெறியில் உங்களைப் பதிவு செய்துகொள்ளுங்கள்.

## 2022/2023 கல்வியாண்டுக்காக விண்ணப்பிக்கக்கூடிய பாடநெறிகள்

### பொறியியல் கற்கைபீடம்

- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Power Systems
- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Telecommunication
- Bachelor of Science (Hons) in Engineering in Electronics and Engineering Management
- Bachelor of Science (Hons) in Engineering in Information and Communication Engineering (Software Engineering)
- Bachelor of Science (Hons) in Engineering in Civil Engineering
- Bachelor of Science (Hons) in Engineering in Mechatronics Engineering

### கணணியியல், தகவல் தொழில்நுட்பம் கற்கைபீடம்

- Bachelor of Science (Hons) in Software Engineering
- Bachelor of Science (Hons) in Cloud Computing
- Bachelor of Science (Hons) in Cyber Security
- Bachelor of Science (Hons) in Data Science

### விஞ்ஞான கற்கைபீடம்

- Bachelor of Science Honours in Biosystems Engineering.

### தொழில்நுட்ப கற்கைபீடம்

- Bachelor of Technology (Hons) in Electronics
- Bachelor of Technology (Hons) in Agricultural Technology
- Bachelor of Technology (Hons) in Environmental Technology
- Bachelor of Science in Textile and Clothing Technology
- Bachelor of Science in Fashion Merchandise Management

### முகாமைத்துவ கற்கைபீடம்

- Bachelor of Business Management (Hons) in Accounting and Finance
- Bachelor of Business Management (Hons) in Human Resource Management
- Bachelor of Business Management (Hons) in Marketing
- Bachelor of Business Management (Hons) in Operations Management
- Bachelor of Business Management (Hons) in Supply Chain Management
- Bachelor of Science (Hons) in E-Tourism and Digital Marketing
- Bachelor of Science (General) Tourism & Hospitality Management

### சங்கீத கற்கைபீடம்

- Bachelor of Music (Honours)

## அக்டோபர்

**08**
குருநாகல்
கண்டி
அம்பாந்தோட்டை
யாழ்ப்பாணம்
மட்டக்களப்பு
களுத்துறை

**09**
பதுளை
பண்டாரவளை
மாத்தளை
காலி
திருகோணமலை
அநுராதபுரம்
நீர்கொழும்பு

**10**
நுவரெலியா
மொணறாகலை

SCAN QR For Online Application

- ENTECH இளைஞர் சிறப்பு புலமைப் பரிசிலுக்கு தகைமை பெற்றுள்ள மாணவர்களுக்கு அன்றைய தினம் புலமைப் பரிசிலைப் பெற்றுக்கொள்வதற்காக தம்மைப் பதிவு செய்துகொள்ள.
- விளையாட்டு மற்றும் அழகியற்கலைசார் கொண்டுள்ள, சமூக நலனோம்புகை நடவடிக்கைகள் மற்றும் சங்கங்கள் மற்றும் அமைப்புக்களில் சிறந்து விளங்கும் செயற்பாடுகளில்
- SLTC ஆராய்ச்சி பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் நீண்டகால கடன் வசதிகள் தொடர்பில் அறிவுறுத்துதல்.
- வெளிநாட்டு கல்வி வாய்ப்புகள் மற்றும் தொழில் வாய்ப்புகள் தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல்.
- விடுதி வசதிகள் தொடர்பிலான விபரங்களை வழங்குதலும் விடுதி வசதிகளை ஒதுக்கீடு செய்வதற்கான வாய்ப்பினை வழங்குதலும்.

www.sltc.ac.lk 0112 100 500

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாகபூஷணி திருமண சேவை

நீங்கள் விரும்பும் அரச உயர்தொழில், தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஏராளமாக உள்ளனர்.

நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்கள் மிகப் பொருத்த மாக உடன் தரப்படும்.

**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.**

(யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த U.K நிரந்தர குடியுரிமை உடைய உயர் தொழில் புரியும் அச்சுவினி நட்சத்திரமுடைய 1981ஆம் ஆண்டு பிறந்த பட்டதாரி மணமகனுக்கு பொருத்தமான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (CS 21040) (3/6)

**077 710 9735**

## பணியாளர் தேவை

யாழ் நகரில் அமைந்திருக்கும் வெண்பா புத்தக நிறுவனத்திற்கு நல்ல திறமையுள்ள பணியாளர்கள் தேவை.

புதிய சவால்களை ஏற்று இயங்கக்கூடியவராகவும்.கணிதத்தில் நல்ல தேர்ச்சி, கம்பியூட்டர் பயன்பாடு மற்றும் ஆங்கிலப் பரீட்சயமும் உள்ளவராக இருக்கவேண்டும். புத்தக வாசிப்பு பழக்கம் இருப்பது மேலதிகத் தகுதியாகும்.

ஆரம்ப ஊதியம் 25,000 & + Sales Commission.
தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றபடி ஊதிய அதிகரிப்பு உண்டு.

ஆர்வமுள்ளவர்கள், உங்கள் சுயவிபரக் கோவையை, உங்கள் புகைப்படத்தோடும் தொடர்பு இலக்கத்தோடும் மின்னஞ்சல் செய்யுங்கள்.

**வெண்பா புத்தக நிறுவனம்.**
No 20A Hindu College Road, Jaffna
யாழ் இந்துக்கல்லூரி மைதான நுழைவாயிலிற்கு எதிரில்.
தொடர்பு எண் 0772222616
இணையம் Venpaa.lk
venpaabookhouse@gmail.com (CS 46867)9/6)

## ஏராளமான அனுகூலங்களுடன்

வாழ்க்கையை வெற்றி கொள்வதற்கு எம்முடன் இணையுங்கள்



பல தசாப்த கால அனுபவத் துடன், சர்வதேச மற்றும் தேசிய மட்டத்தில் வியாபார குழுமமாக திகழ்வதுடன், பல விருதுகளை சுவீகரித்துள்ள, சிறந்த வியாபார வலைய மைப்பில் ஜொலித்திடும் நட்சத்திரமாகத் திகழ்வதற்கு உங்களுக்கான அழைப்பு!

- வரையறைகளற்ற வருமானம்
- சுதந்தரமாக பணியாற்றுவதற்கு பொருத்தமான சூழல்
- பதவியில் உயர்ந்த நிலைக்கு செல்லக்கூடிய தொழில் வழிகாட்டல்
- வெளிநாட்டு சுற்றுப் பணயங்கள்

**076 890 3761, 077 560 2579**
பலாலி வீதி, கோண்டாவில்

## வாடகைக்கு

யாழ். வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் இரண்டு மாடியுடன் கூடிய ஒரு கட்டடம் அலுவலக பாவனைக்கு உகந்தது. மற்றும் A9 வீதியில் தபால் கட்டை சந்தி அரியா லையில் அமைந்துள்ள கடைத்தொகுதியின் மேல்மாடி வாடகைக்கு விடப்படும். (CS 46866) (3/6)

**021 222 2691, 077 643 0681**

## பணிப்பெண் தேவை

கொழும்பில் உள்ள மருத்துவர் வீட டொன்றில் தங்கியிருந்து குழந்தைகளை பராமரிப்பதற்கும், சமையல் செய்வதற்கும் அனுபவமுள்ள பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். (CS 21031) (3/6)

**076 128 3990**

## தேவை

LANCER HONDA 50 மோட்டார் சைக்கிள் விலைக்குத் தேவை
(CS 46869) (3/6)

**T.P 077 921 3881**

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**077 327 6502**

## செம் மண் தேவை

யாழ். மாவட்ட பிரதேசத்தில் தோட்டத்துக்கு உகந்த செம் மண் உடன் தேவை. (டிப்பர் லொறி) (cs 21029) (2/6)

**076 287 8655**

## காணி விற்பனைக்கு

மட்டுவில் தெற்கு, துர்க்கை அம்மன் வீதியில் 16 பரப்பு மேட்டுக்காணி விற்பனைக்குண்டு. விலைபேசித் தீர்மானிக்கப்படும்.

**077 490 9825, 075 490 2141**

## மணப்பெண் தேவை

ஜேர்மனியில் வசிக்கும் யாழ். இந்து கௌரவ குடும்பம், ஆயிலியம், 1988 இல் பிறந்த தொழில்புரியும் மகனுக்கு படித்த இலங்கை அல்லது ஜேர்மனி, சுவிஸ், கனடா, நாடுகளில் வதியும் மணப்பெண் தேவை.
(CS 689) (3/6)

**077 171 2877**

## வாகன விற்பனைக்கு



ACTYON SPORTS 2009 FULL OPTION MODEL 4 WD ( original rear canapy)
உரிமையாளர் வெளிநாடு செல்கிறார்.

தொடர்புகளுக்கு
**0725937355 (Wellawatte)**

# CHROMIRA

## ENLARGE PHOTO PRINT

30 Inches Wide. Any Length Can Be Printed.

FIRST TIME IN SRILANKA

Discount For Diwali
24.10.2022

ARISSONA (PVT) LTD
ADVERTISING & PUBLICATION
93, Palaly Road, Thirunelvely, Jaffna.
021 222 3222, 076 141 9307
www.arissona.com | info.arisona.com

You Can Order Your Albums Through Our Website as If You Where in your Company.

**Long Term Use**

Size
24x30 | 24x36 | 16x24 | 30x50 Etc

30 Percent Discount on Enlarge Photo Print up to 12 Inch
எங்களிடம் 12 Inch மேற்பட்ட பெரியளவிலான போட்டோபிறிண்ட் செய்தால் 30% விலைக்கழிவு

CHROMIRA ENLAGE PHOTO PRINT 30% OFF










CANON ENLAGE PHOTO PRINT 30% OFF




Baby Photo PRINTING SOLUTIONS

INNOVATION IN PRINT

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

ஜனனம் 30 - 01 - 1936



மரணம் 29 - 09 - 2022

## வைத்தியலிங்கம் சுப்பிரமணியம்

யாழ். மீசாலையை பிறப்பிடமாகவும், டொராண்டோ கனடாவை வதிவிடமாகவும் கொண்ட வைத்தியலிங்கம் சுப்பிரமணியம் அவர்கள் கடந்த (29-09-2022) வியாழக் கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்தியலிங்கம், சின்னப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற வாரித்தம்பி, தில்லைநாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும், பாலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும், உமாதேவி, உதயகுமார், உதயகுமாரி, சந்திரமதி, சந்திரகுமார், தயாபதி, யதுநந்தினி, றஜனி, பாரதிகுமார், ராஜீவ்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சேதுப்பிள்ளை, பரமசாமி, அன்னப்பிள்ளை, தம்பிப்பிள்ளை மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கிருஷ்ணசாமி, சரஸ்வதி, காலஞ்சென்ற மயில்வாகனம், கமலாதேவி, ரதிதேவி ஆகியோரின் மைத்துனரும், ராஜதுரை, வனஜா, சுதாகரன், சண்முகரட்ணம், ஹர்ஷினி, தவலிங்கம், அகிலன், குகதாசன், நித்தியா, தனுசியா ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுல், றதீஸ், றொசாந், அஷ்வின், திரிசா, சப்பிரியா, மனிஷா, மாதுளா, அனிஷ், லக்ஷா, அக்ஷித், அக்ஷரன், மதூஷ், அனுக்ஷா, யனுஷன், அனிகா, ஆருஷன், ஆராதனா, அகரன், ஆரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை 10:00 AM - 10:15 AM மணிக்கு Elgin Mills Cemetery, Cremation & Funeral Centres 1591 Elgin Mills Road East, Richmond Hill, ON, CANADA, L4S 1M9 Get Directions எனும் முகவரியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உதயகுமார் - மகன் Mobile : +14168066526
சந்திரகுமார் - மகன் Mobile : +14164335392
பாரதிகுமார் - மகன் Mobile : +14168544813
ராஜீவ்குமார் - மகன் Mobile : +6472396406

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21047) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 02 . 1944



மறைவு 30 . 09 . 2022

## அருணாசலம் பேரம்பலம்

காடிவளை இளவாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் பேரம்பலம் நேற்றுமுன்தினம் (30.09.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - சம்பரம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நடராசா - கனகமணி தம்பதியரின் மருமகனும், ஈஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், சின்னப்பிள்ளை, தவமணி ஆகியோரின் சகோதரனும், சுகுமாரன், காலஞ்சென்ற லவக்குமார் மற்றும் சோபனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சயந்தினி, சசீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும், பிரவீன், கவினா அபினா, தசானா, வைசன் ஆகியோரின் பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பாதர்காடு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காடிவளை,
இளவாலை.

தகவல்:
குடும்பத்தினர்
077 079 4263

(cs 46747) (2.6)

# மரண அறிவித்தல்



## வேலுப்பிள்ளை செல்வரட்ணம்

யாழ். தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, துபாய், கனடா Scarborough ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்வரட்ணம் அவர்கள் கடந்த (25-09-2022) ஞாயிற்றுக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை தங்கம் தம்பதிகளின் அருமை புத்திரரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி, லட்சுமி சின்னத்தம்பி (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் (இந்திரன்), லோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தனலட்சுமி ஆறுமுகம் (அவுஸ்திரேலியா), இராஜலிங்கம், உதயகுமார், காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரமேஸ், சுரேஸ், யமுனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஷரோணி, சுரேஸ், சபேஸ், பிரபாகரன், பிரிந்தினி, பிரதாபன், சுதாகரன், சுதர்சன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும், கார்த்திகாஜனி, மோகாணி, செந்தூரன், ரபீனா, ரஜித் ஆகியோரின் பாசமிகு மாமாவும், காலஞ்சென்ற செல்லையா அருளம்பலம் (மலேசியா) அவர்களின் அன்பு மருமகனும், கிஷ்னன், ஆரியா, ஆரியானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


R.பிரபாகரன்
077 867 7261

தகவல்:
குடும்பத்தினர்

(CS 21036) (3/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 02 . 1942



மறைவு 30 . 09 . 2022

## திரு. செல்லப்பா நடராசா (யோகராசா)

பூநகரி செல்வியாதீவைப் பிறப்பிடமாகவும், முக்கொம்பன் பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட திரு. செல்லப்பா நடராசா (யோகராசா) கடந்த (30.09.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசையா - சிதம்பரம் தம்பதிகளின் அன்பு மருமகனும், பராசக்தியின் அன்புக் கணவரும், கமலலோஜினி (லண்டன்), சிவநேசன் (லண்டன்), சிவசொரூபன், காலஞ்சென்ற சிவதாசன் மற்றும், சிவசொரூபி (கனடா), சிவலோஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலச்சந்திரன் (லண்டன்), உதயகுமாரி (லண்டன்), திஸ்யந்தி, ராசிகன் (கனடா), சுதர்சன் (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும், நாகேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கந்தையா, பாலசுப்பிரமணியம் மற்றும் பரமேஸ்வரன், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் ஞானசேகரம், ஞானசௌந்தரி, பரமேஸ்வரி, இராஜேஸ்வரி, காலஞ்சென்றவர்களான இராஜநிதி, சிவானந்தன் ஆகியோரின் அன்பு சகோதரனும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் மங்கையற்கரசி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணதேவி மற்றும் இராஜரட்ணம், தனபாலதேவி, தம்பிராசா, சின்னையா, முருகானந்தன், அன்னலட்சுமி, காலஞ்சென்ற ஏகாம்பரநாதன் ஆகியோரின் மைத்துனரும், சுலக்சன், றெஜினா, றெக்சன், ஹரிசன், பிரதாஸ், ஹரிதாஸ், றஜீவன், வைஷ்ணவி, றஷ்னவி, அபினா, அபினாஷ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் காலை 9.30 மணிக்கு ஐந்தடிவான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

முக்கொம்பன், பூநகரி.

தகவல்: குடும்பத்தினர்
ந. சிவசொரூபன் : 077 696 8623

(CS 21042) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உக்ரைனின் 4 பகுதிகள் ரஷ்யாவுடன் இணைப்பு

## சர்வதேசம் கடும் கண்டனம்

**மொஸ்கோ, ஒக். 2**

**சர்வதேசத்தின் கடும் கண்டனத்தை மீறி உக்ரைனின் நான்கு பகுதிகள் ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டுள்ளன. எனினும், புடினின் இந்த அறிவிப்பை ஏற்கப்போவதில்லை என்று ஐ.நா. திட்டவட்டமாக அறிவித்துள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் முயற்சிகளை மேற்கொண்டதை அடுத்து உக்ரைனுக்கு எதிராக பெப்ரவரி மாதம் போர் தொடுத்தது ரஷ்யா. 'சிறப்பு இராணுவ நடவடிக்கை' என்ற பெயரின் கீழ் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கை கடந்த 8 மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்தப் போரில் உக்ரைனின் பல பகுதிகள் ரஷ்யாவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே ரஷ்ய - உக்ரைன் எல்லையில் உள்ள பகுதிகள் ரஷ்யாவின் நிலப்பரப்புடன் இணைக்கப்பட்டுள்ளன என்ற அறிவிப்பை வெளியிட்டுள்ளார் ரஷ்ய அதிபர் புடின்.



லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், ஜபோரிஜியா ஆகிய பகுதிகளே ரஷ்யக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளில் வாக்கெடுப்பை நடத்திய ரஷ்யா அந்த மக்களின் விருப்பத்துடனேயே தன்னுடன் அந்தப் பகுதிகளை இணைத்துள்ளது. மேற்குறித்த பகுதிகளில் ரஷ்ய மொழி பேசுபவர்களே கணிசமாக வாழ்கின்றனர். அவர்களுக்கு எதிராக உக்ரைன் அரசாங்கம் பல்வேறு கெடுபிடிகளை மேற்கொண்டது - மேற்கொள்கின்றது என்று ரஷ்யா தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வந்தது. இந்தப் பின்னணியிலேயே அந்தப் பகுதிகள் தற்போது ரஷ்யாவுடன் இணைக்கப்பட்டுள்ளன. (ம)




# ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இந்தியா?

**புதுடில்லி, ஒக். 2**

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்துள்ளது. இதனால், உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா மேற்கொள்கின்றதா? என்ற கேள்விகள் எழுந்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்ய ராணுவம் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், கைப்பற்றப்பட்ட லுஹான்ஸ்க் உள்ளிட்ட 4 நகரங்களை தங்கள் நாட்டுடன் இணைத்துக்கொண்டதாக ரஷ்ய அதிபர் புடின் நேற்றுமுன்தினம் அறிவித்தார். இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் ரஷ்யாவுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் அல்பேனியாவால் தீர்மானம் கொண்டுவரப்பட்டு, அது தொடர்பான வாக்கெடுப்பு நடந்தது. இந்த வாக்கெடுப்பை இந்தியா புறக்கணித்துள்ளது.

ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர உறுப்பினர் ருச்சிரா கம்போஜ், 'இந்திய அரசு எப்போதும் அமைதிப் பேச்சின் பக்கமும், ராஜாங்க ரீதியிலான உறவுகளின் பக்கமுமே நிற்கிறது. உக்ரைனில் அண்மையில் நடந்துள்ள நிகழ்வுகள் வருத்தமளிக்கின்றன. இருப்பினும் இந்தப் பிரச்சினையின் முழுமையான நிலைவரத்தை கருத்திற் கொண்டு இந்தியா இந்த வாக்கெடுப்பை புறக்கணிக்கிறது' - என்றார். (ம)

# உக்ரைனுக்கு மேலதிக இராணுவத் தளபாடங்கள்

## அமெரிக்க அறிவிப்பு

**வொஷிங்டன், ஒக். 2**

உக்ரைனின் நான்கு பிராந்தியங்களைக் கையகப்படுத்தி ரஷ்யா தன்னுடைய நிலப்பரப்புடன் இணைந்துள்ள நிலையில், உக்ரைனுக்கு மேலதிகமான இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார் அமெரிக்க அதிபர் பைடன்.

இது தொடர்பில் பைடன் தெரிவித்ததாவது:-

ரஷ்ய அதிபர் புடின் மற்றும் அவரது பொறுப்பற்ற வார்த்தைகள் மற்றும் அச்சுறுத்தல்களால் அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பயப்படப் போவதில்லை. புடினின் செயற்பாடுகள் அவர் போராடிக் கொண்டிருப்பதற்கான அறிகுறியாகும். அவரால் அண்டை நாட்டின் நிலப்பரப்பைக் கைப்பற்றி அதிலிருந்து தப்பிக்க முடியாது. உக்ரைனுக்கு நாங்கள் தொடர்ந்து இராணுவத் தளபாடங்களை வழங்குவோம். நேட்டோ பிராந்தியத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் பாதுகாக்க அமெரிக்கா நேட்டோ நட்பு நாடுகளுடன் இணைந்து முழுமையாக தயாராக உள்ளது. நான் எங்கள் நட்பு நாடுகளுடன் நெருங்கிய தொடர்பில் இருக்கிறேன். புதிய தடைகளை ரஷ்யாவுக்கு எதிராக அறிவிக்கவுள்ளோம் - என்றார். (ம)



# வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனை

**பியாங்யாங், ஒக். 2**

வடகொரியா மீண்டும் ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது என்று தென்கொரியா பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியுள்ளது. இந்த வருடம் இதுவரையில் சுமார் 15க்கும் மேற்பட்ட ஏவுகணைச் சோதனைகளை வடகொரியா நடத்தியுள்ள நிலையில், நேற்றுமுன்தினமும் வடகொரியா மற்றொரு ஏவுகணைச் சோதனையை நடத்தியுள்ளது என்று தென்கொரியா குற்றஞ்சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் தென்கொரிய பாதுகாப்பு அமைச்சின் சார்பில் எங்களது பாதுகாப்புத்துறை கண்காணித்ததில் வடகொரியா அதன் தலைநகர் பியோங்யாங்கில் உள்ள சுனான் பகுதியில் இருந்து குறுகிய தூரம் சென்று இலக்கைத் தாக்கும் இரண்டு ஏவுகணைகளை பரிசோதனை செய்தது தெரியவந்தது. இந்த ஏவுகணைகள் 360 கி.மீ. தூரம் செல்லும் தன்மையுடையன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் துணை அதிபர் கமலா ஹாரிஸ் தென்கொரியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பின்னணியில் இந்த ஏவுகணைச் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசைப்பொருள்களின் விலையும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 2

நவராத்திரி பூசைக்கான பொருள்களின் விலை இம்முறை இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் கடலை, அவல், சர்க்கரை, பயறு, கௌபி போன்ற பொருள்கள் யாவும் இரட்டிப்பான விலையில் விற்கப்படுகின்றன. குறிப்பாக பயறு, கௌபி போன்றன கிலோ ஆயிரம் ரூபாவையும் தாண்டி விற்கப்படுகின்றன. அதைவிட தேங்காய், ஊதுபத்தி, கற்பூரம் போன்றவற்றின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளன. (ம-14,17)


### காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் 4பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

077 601 1135

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ். நகரில் படிக்கும் மாணவர்களுக்கு தனியாகவும் இரண்டு பேர் கொண்ட குடும்பத்திற்கு தனியாகவும் மற்றும் நாளாந்த, வாராந்த வீடுகளும் வாடகைக்கு உண்டு.

077 34 800 39, 077 258 89 38

### வீடு வாடகைக்கு

கோவில் வீதியில் அமைந்துள்ள குளிரூட்டப்பட்ட அறைகளுடன் சகல வீட்டுத்தளபாடங்களும், வாகன தரிப்பிட வசதி உள்ள வீடு வாடகைக்கு உண்டு.


குறிப்பு :- அரச சார்பற்ற நிறுவனங்கள், அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு இல.

077 5144 700, 021 222 9989


## மரண அறிவித்தல்

தோற்றம்
25
.
03
.
1949



மறைவு
30
.
09
.
2022

### சின்னத்தம்பி கந்தசாமி

தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தசாமி நேற்றுமுன்தினம் (30.09.2022) வெள்ளிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான மானார் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பத்மாவதி (தேவி)யின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், குமாரசாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான திரிபுரியம்மா, உருத்திராடம்மா (செல்லம்மா), துரைசிங்கம், வைத்திலிங்கம், சின்னப்பிள்ளை மற்றும் பத்மநாதன், கோபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும், யசிந்தா, ராஜினி, யஜோதினி, ரஜனி, தயாபரன் காலஞ்சென்ற ஜெயன் ஆகியோரின் அன்பு சிறியதந்தையும், தினேஸ்குமார், ஜெயந்திரி, ஜெனனி ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கைதடி மேற்கில் அமைந்துள்ள அவரது மைத்துனர் (பத்மநாதன்) இன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி மேற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
076 670 4292

(cs 46873) (2.6)

## மரண அறிவித்தல்

தோற்றம்
06
.
11
.
1939



மறைவு
01
.
10
.
2022

### திருமதி அன்னலட்சுமி தர்மலிங்கம்

(பிள்ளைக்குஞ்சி)

பன்னாலை, தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது 8D, ஸ்ரீபால வீதி, கல்கிசையை வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி அன்னலட்சுமி தர்மலிங்கம் அவர்கள் 01.10.2022 சனிக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற பன்னாலை கந்தையா மூத்ததங்கம் தம்பதிகளின் மகளும் காலஞ்சென்ற சொக்கலிங்கம் காமாட்சிப் பிள்ளை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற தர்மலிங்கம் (முன்னாள் T.A. நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களின் அன்பு மனைவியும் சகுந்தலா (வீதி அபிவிருத்தி அதிகார சபை தலைமைக் காரியாலயம், பத்தரமுல்ல), கௌசலா (மலேசியா), காலஞ்சென்ற கலியுகவரதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேஷ் (மலேசியா) அவர்களின் மாமியாரும் தருண் கரிசன், தருண் சோபன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மாள், பாலசுப்பிரமணியம், சரஸ்வதி, மகேஸ்வரி, பரமேஸ்வரி, தம்பிப்பிள்ளை மற்றும் விநாயகமூர்த்தி (தெல்லிப்பளை), மனோன்மணி (லண்டன்) காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிமுதல் மாலை 5.00 மணி வரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் இறுதிக்கிரியைகள் நாளை (03.10.2022) திங்கட்கிழமை மதியம் 1.00 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பி.ப 3.00 மணிக்கு கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செல்வி.சகுந்தலா தர்மலிங்கம் (மகள்)
திருமதி.கௌசலா கணேஷ் (மகள்).
8D-2/4, ஸ்ரீபால வீதி, கல்கிசை.
தொடர்புகளுக்கு: 071 440 9979, 011 272 5801

(CR 38177) 1/6

## மரண அறிவித்தல்



### சின்னத்தம்பி துரைராஜா

யாழ். அம்பனை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி துரைராஜா அவர்கள் கடந்த (29.09.2022) வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி ஆச்சிமுத்து தம்பதிகளின் பாசமிகு மருமகனும், சகுந்தலா அவர்களின் பாசமிகு கணவரும், செல்வகுமார் (பிரான்ஸ்), மேகலா (லண்டன்), ரமேஸ்குமார் (பிரான்ஸ்), அஜந்தா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரன் (லண்டன்), லோகேஸ் (லண்டன்), வைதேகி (பிரான்ஸ்), ஷாழினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், செல்வப்பிரியா, மகிஷா, மிதுஷா, மித்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் ஆசை அப்பப்பாவும்,அதீசன், சயுன், நிகிஷா(லண்டன்) ஆகியோரின் செல்லத் தாத்தாவும், காலஞ்சென்ற குணரட்ணம், நல்லம்மா, ராசமணி, செல்லமணி, தங்கமணி, மகாலட்சுமி, கதிரமலை, விஜயரட்ணம் (கனடா), மனோன்மணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (03.10.2022) திங்கட்கிழமை மு.ப 10:00 மணியளவில் தெல்லிப்பழையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக தெல்லிப்பளை கொத்தியால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
செல்வகுமார் - மகன் Mobile : +33148784327
ரமேஸ்குமார் - மகன் Mobile : +94783338682

தகவல்:
குடும்பத்தினர்

(CR 38179) 1/6

## மரண அறிவித்தல்



தோற்றம்
20
.
08
.
1963

மறைவு
29
.
09
.
2022

### திருமதி சிவசக்தி ஸ்ரீகந்தராசா

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்தி ஸ்ரீகந்தராசா கடந்த (29.09.2022) வியாழக்கிழமை காலமானர்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - பாலாமணி தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், ஸ்ரீகந்தராசாவின் பாசமிகு மனைவியும், தர்மநாயகி, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், குணஈஸ்வரி (மண்டைதீவு), நகுலேஸ்வரி (கிளிநொச்சி), அரங்கநாயகி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஸ்ரீவரதன் (சுவிஸ்), காலஞ்சென்ற பவித்திரா மற்றும் கஜந்தன் (லண்டன்), கிருசாந்தன் (லண்டன்), சுஜிக்கா (லண்டன்) ஆகியோரின் பிரியமிகு தாயாரும், ரெஜீனா (சுவிஸ்), சுகன்ஜா (லண்டன்), திலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், றிவான், விகான், நிலான், லியா, லயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் (அச்சுவேலி ) நடைபெற்று, வல்லை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
அன்புக் கணவர்
ஸ்ரீகந்தராசா (சிறி)

T.P.: 077 849 6546, 077 770 5101
+44 757 748 7433, +4178 8383 727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் - இந்தியா இடையே சுதந்திர வர்த்தக ஒப்பந்தம்

## தீபாவளிக்கு முன்னர் நிறைவேற்ற எதிர்பார்ப்பு

புதுடில்லி, ஒக். 2

பிரிட்டனில் அரசியல் குழப்பங்கள் மற்றும் ராணி எலிசபெத்தின் உயிரிழப்புக் காரணமாக, பிரிட்டனுடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் பற்றிய பேச்சுக்களில் தொய்வு ஏற்பட்டிருந்தாலும், எதிர்வரும் தீபாவளிக்கு முன்னர் அதனை நிறைவேற்றுவதற்கு இரு நாடுகளும் உறுதியாக இருக்கின்றன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

பிரிட்டனின் புதிய பிரதமர் தீபாவளிக்கு முன்னர் ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கின்றார் என்று உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தில் உள்ள 26 விடயங்களில் 17 விடயங்கள் தொடர்பில் 5 சுற்றுப் பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளன.

2030 ஆம் ஆண்டளவில் பொருள்கள் மற்றும் சேவைகள் இரண்டின் இரு தரப்பு வர்த்தகத்தை 100 பில்லியன் டொலராக இந்த ஒப்பந்தம் ஊடாக இலக்கு வைத்துள்ளனர். (ஏ-இ)

நாடாளுமன்றத்திலிருந்து

# இறைச்சியும், முட்டையும் போகின்றன வெளியே!

கொழும்பு, ஒக். 2

உலர்ந்த இறைச்சி, மீன், முட்டை போன்ற உணவுப் பொருள்கள் நாடாளுமன்ற சாப்பாட்டு அறைப் பிரிவில் இருந்து வெளியே கொண்டு செல்லப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவற்றின் விலை உயர்வால், சில தொழிலாளர்கள் தினமும் இரகசியமாக இந்த பொருள்களை தங்கள் வீடுகளுக்கு எடுத்துச் செல்வதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் முட்டைகளே இவ்வாறு அதிகளவில் எடுத்துச் செல்லப்படுவதாக கூறும் அந்த வட்டாரங்கள், சமைத்த உணவுகள் மட்டுமின்றி உலர் உணவுப் பொருள்களும் நாடாளுமன்றத்துக்கு வெளியே கொண்டு செல்லப்படுவதாகத் தெரிவித்தன.

இந்த பொருள்களை தமது பயணப் பொதிகளில் மறைத்து வைத்து அவர்கள் எடுத்துச் செல்வதால், உடைமைகளை முறையாகச் சோதனை செய்தால், இவ்வாறான முறைகேடுகளைத் தவிர்க்க முடியும் என்று நாடாளுமன்ற அதிகாரிகள் குழுவொன்று குறிப்பிட்டுள்ளது. (அ-ஓ-இ)

## வேதனத்தை அதிகரித்துத் தருமாறு கடவைக் காவலாளிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 2

கடந்த எட்டு வருடங்களாக மாதாந்தம் 7 ஆயிரத்து 500 ரூபா வேதனத்தில் கடமையாற்றும் ரயில் கடவை காவலாளிகள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமெனவும் தற்போது மாதாந்தம் வழங்கப்படும் வேதனத்தை அதிகரித்து வழங்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாடளாவிய ரீதியில் ரயில் கடவைக் காவலாளிகள் கடமையாற்றுகின்ற போதிலும் கடந்த 2014 ஆம் ஆண்டுவடமாகாணத்துக்கான தொடருந்துக் கடவைகளுக்கு காவலாளிகள் பொலிஸாரால் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருகின்றனர்.

தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டுமென அவர்கள் போராட்டங்களை நடத்தியபோதிலும் இதுவரை உரிய பயன் கிடைக்கவில்லை. இந்த நிலையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியான வேளையில், அவர்களுடைய மாதாந்த வேதனம் குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்குப் போதாது என்பதால் கடவைக் காவலாளிகள் தமக்கு ஊதிய அதிகரிப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

### உயிர்கொல்லி ஹெரோய்ன்...

எடுத்து வருவதாக பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்பிலேயே கைது செய்யப் பட்டுள்ளார். (அ-ஓ-5)

### உயர்பாதுகாப்பு...

கொழும்பின் சில முக்கிய பிரதேசங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சால் வர்த்தமானி ஒன்று வெளியிடப்பட்டது. இதற்கு எதிராக கொழும்பில் போராட்டங்கள் நடத்தப்பட்டன. வழக்குகளும் தாக்கல் செய்யப்பட்டன. சர்வதேச சமூகமும் இதனைக் கண்டித்திருந்தது.

இந்த நிலையில் வெளிநாட்டுப் பயணங்களை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு நாடு திரும்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை மீளப்பெற்றுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை, உயர் நீதிமன்ற வளாகம், பாதுகாப்பு அமைச்சின் தலைமையகம் உள்ளிட்ட முக்கியமான கட்டடங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவிக்கப்பட்டன. இந்த பிரதேசங்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதியின்றி ஒன்று கூடல், கூட்டங்களை நடத்துதல் உள்ளிட்ட செயல்களுக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. இந்த வர்த்தமானியே தற்போது திரும்பப்பெறப்பட்டிருக்கின்றது. (அ-ஓ-இ)

### உயிர்கொல்லி ஹெரோய்னுடன்...

வட்டுக்கோட்டை கிழக்குப் பகுதியிலுள்ள தனது வீட்டில் ஹெரோய்னை பல்கலைக்கழக மாணவன் வைத்திருக்கிறானென பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு பொலிஸார் சென்றுள்ளனர்.

அவரிடமிருந்து 750 மில்லி கிராம் ஹெரோய்ன் கைப்பற்றியதாகவும் சந்தேகத்தில் 22 வயதான பல்கலைக்கழக மாணவனைக் கைது செய்ததாகவும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ஓ-125)

### ஹெரோய்ன்...

கவலையளிக்கின்றது - இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் விற்பனையாளர்களையும், பாதாள உலகக் குழுவினரையும் தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

இந்நிலையில், வடக்கில் ஹெரோய்ன் போதைப்பொருளை விற்பனை செய்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

முதலில் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால்தான் போதைப்பொருள் பாவனையை முடிவுக்குக் கொண்டுவர முடியும் - என்றார். (அ-ஓ-22)

### மின்வெட்டு...

செய்யப்பட்டு மீண்டும் தேசிய மின்னோட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

முதலாவது மற்றும் மூன்றாவது மின்பிறப்பாக்கி இயந்திரங்களும் முழுத் திறனில் இயங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் மின்பிறப்பாக்கி இயந்திரத்தில் இடம்பெறும் 3 மாத வழக்கமான சீரமைப்பு பராமரிப்பு பணிகள் இந்த மாத நடுப்பகுதியில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார். (அ-ஓ-இ)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

### பெற்றோல்...

லீற்றருக்கு 30 ரூபாவால் குறைவடைந்து 510 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என்று எரிசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சர் அறிவித்துள்ளார். இதே விலை குறைப்பை ஐ.ஓ.சி. நிறுவனமும் மேற்கொண்டுள்ளது. (அ-ஓ-இ)

### மின்சாரக்...

அனைவரது மின் இணைப்புக்களும் துண்டிக்கப்பட்டு வருகிறது என கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மின் கட்டண நிலுவை 4 ஆயிரம் ரூபாவுக்கு அதிகமாகவுள்ள மின் பாவனையாளர் உடனடியாக கட்டணத்தை செலுத்தி மின்துண்டிப்பை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதோடு, கட்டணம் செலுத்தாத நிலையில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் செலுத்த வேண்டிய மின் கட்டணப் பட்டியலின் முழுத் தொகையையும் செலுத்துவதோடு, மீள இணைப்பதற்கான மேலதிக கட்டணம் 3 ஆயிரம் ரூபாவும் செலுத்த வேண்டும் என கிளிநொச்சி, முல்லைத்தீவு மின் பொறியியலாளர் அலுவலகம் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளது. (அ-ஓ-214)

### மின் ஒழுக்கால்...

உள்ளாகி உயிரிழந்துள்ளனர். வல்வெட்டித்துறை, நெடியகாடு, ஏ.ஜீ.ஏ. ஒழுங்கையில் உள்ள வீடொன்றிலேயே நேற்று அதிகாலை 4.15 மணியளவில், இந்தப் பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணை மற்றும் உடற்கூற்று பரிசோதனையின் போதே மின் ஒழுக்கால் உண்டான தீ, பெற்றோலில் பரவியதால் உண்டான விபத்தாலேயே அனர்த்தம் நேர்ந்துள்ளது என அறிக்கையிடப் பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த சரவணபவா ரஞ்சித்குமார் (வயது-30) அவரது மனைவி கிருசாந்தினி (வயது -26) என்ற இருவருமே சடலமாக மீட்கப்பட்டனர்.

'சம்பவத்தில் உயிரிழந்தவரான ரஞ்சித்குமார், அண்மையில் சீனத் தயாரிப்பிலான அலைபேசி ஒன்றைக் கொள்வனவு செய்திருந்தார். அந்த அலைபேசி வெப்பமாகியோ அல்லது அதன் சார்ஜர் வெப்பமாகியோ மின்னொழுக்கு ஏற்பட்டு, படுக்கை அறையில் பெரிய கானிலும் போத்தலிலும் சேமித்து வைக்கப்பட்டிருந்த பெற்றோலில் அது பரவியதால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.' என்று தடயவியல் விசாரணையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

தம்பதியர் உறங்கிய அறையில் தீ பற்றி எரிவதைக் கண்ட வீட்டிலிருந்தவர் அறையை உடைத்து உள்நுழைந்த போதும், இருவரும் தீயில் எரிந்து சடலமான நிலையிலேயே மீட்கப்பட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணையில் அறையில் மின் ஒழுக்கு ஏற்பட்டமை மற்றும் பெற்றோல் பரவியமை தொடர்பில் கண்டறியப்பட்டன. உயிரிழந்த பெண்ணின் கையில் அலைபேசி சார்ஜர் வயரும் மீட்கப்பட்டது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் நேற்றுமாலை இடம்பெற்ற உடற்கூற்று விசாரணையில் தீக்காயங்களுக்கு உள்ளாகியமையால் உயிரிழந்துள்ளனர். சந்தேகப்படும் வகையில் உடல்களில் அடி காயங்கள் இல்லை என்று அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஓ-26)

### மஹிந்தவின்...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

குறித்த கோரிக்கை கோத்தபாய ராஜபக்சவின் அலுவலகத்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச வசித்து வந்த விஜேராம இல்லத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்தவுடன் அவர் அங்கு செல்வார் என தெரிவிக்கப்படுகின்றது. அதன் பின்னர் ஹெக்டர் கொப்பேகடுவ வீதியில் அமைந்துள்ள வீட்டை தனக்கு வழங்குமாறு கோத்தாபய கோரிக்கை விடுத்துள்ளார். (அ-ஓ-இ)

### மாணவர்களிடம்...

விசேட கோரிக்கை விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் முறைசாராமல் பணம் வசூலிப்பதைத் தடைசெய்து 2015/5 சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவித்த கல்விச் செயலர், குறிப்பாக அதிபர்கள் கடுமையான நிதிச் சிக்கல்களுக்கு மத்தியில் உள்ள பெற்றோருக்கு தேவையற்ற சுமைகளை ஏற்படுத்தாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் - என்றார். (அ-ஓ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

முருகண்டி அறிவியல் நகரில் இயங்கும் ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் ஆண், பெண், இருபாலரும் தேவை. இனிப்பு வகை, சமையலாளர், சப்ளையர், துப்பரவாளர், கணினி அறிவுடைய காசாளர்

(CS 21045) (3/6) **077 799 3331, 071 010 4545**

## ENGLISH CLASSES

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

**யாழ் நகரில் தனி வகுப்பு**

**G.C.E O/L, A/L, பட்டதாரிகள் தொழில் புரிபவர் ஆர்வமுள்ளவர்களுக்கு**

**G.C.E O/L Literature**

**K.Ganesh B.A 077 766 8725**

## காணி விற்பனைக்கு

மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் A9 வீதிக்கு அருகாமையில் 10 ஏக்கர் தென்னங்காணி விற்பனைக்குண்டு.

**077 438 4866**

## உடனடி வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பிரபல நிறுவன மொன்றிற்கு வியாபாரத்தில் நன்கு தேர்ச்சி பெற்ற ஓடர் எடுக்கக்கூடிய (Sales Rep) பணியாளர் ஒருவர் தேவை.

(CS46869)(3/6)

**077 965 2001, 077 260 1850**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1992ஆம் ஆண்டு ஆயிலிய நட்சத்திரத்தில். லண்டனில் பிறந்து வசிக்கும் அழகான நற் குண முடைய. செவ்வாய் தோஷ குற்றமற்ற பட்டதாரி மணமகனுக்கு படித்த நற்குண முடைய அழகிய மணமகளை இலங்கையில் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தயவு செய்து தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**044 0740 3774252, 076 520 9123**

(CS 46848) (3/6)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில்**

**10 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமானநிலையம் செல்லும் பிரதான வீதிக்கு அருகாமை
- தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 750 M தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில

**076 755 8606**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.**

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (தாப்பெர்) வீதி முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: **0772880152**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.**

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 7.5 லட்சம் ரூபா மட்டும்.

தரகர் தேவையில்லை . பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 **0776585999**

**மின்சாரம் துண்டித்து விட்டதா?**

**மின்சார கட்டணங்களும் பில் ஏறிவிட்டதா?**

**இதோ இதற்கான தீர்வை நாங்கள் பெற்றுத் தருகிறோம்**

சகல விதமான மின்சாரப் பொருள்கள் பாவிக்க கூடியவாறு SOLAR INVERTER மிகவும் மலிவான விலையில் பொருத்தி தரப்படும். மின்சார கட்டணமும் சேமிக்கப்படும் மற்றும் CCTV கேமராக்கள் பொருத்தி தரப்படும் **J.J GROUP** 021 222 8854

(CS 20204)(3/6) No. 603, K.K.S, Road, Jaffna 077 555 5100

## பணியாளர்கள் தேவை

**யாழ்நகரில் இயங்கும் பிரபல முன்னணி நகைவியாபார நிலையத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.**

- **கணக்காளர்:** A/L வர்த்தக துறையில் படித்த கணினி அறிவுடைய ஆண்/பெண். முன் அனுபவம் விரும்பத்தக்கது.
- **கணினி தரவு பதிவாளர்** (Data Entry Operator): (ஆண் / பெண்)
- **விற்பனை உதவியாளர்** : (ஆண் / பெண்)
- **சிட்டை எழுதுனர்:** வடிவான கையெழுத்து உடையவராக (ஆண் / பெண்)

சுயவிபரக் கோவையுடன் திங்கள் முதல் சனிக்கிழமை வரை மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 4.00 மணிவரை நேரில்வரவும்.

**நியூ லலிதாஸ் ஜ்வெல்லறி**

**இல.30,32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**077 224 5511**

## தேவை

**வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்க விருக்கும் உணவகத் தொடர் (Restaurant Chain) கீழ் குறித்த இடங்களில் 2 பரப்பு வெற்றுக்காணி / தகுந்த கட்டடத் தொகுதி / வீடுகள் நீண்டகால குத்தகைக்கு or விற்பனைக்கு தேவை.**

- யாழ்ப்பாணம்
- பருத்தித்துறை
- நெல்லியடி
- கொடிகாமம்
- சாவகச்சேரி
- காங்கேசன்துறை
- மானிப்பாய்
- சங்கானை
- கிளிநொச்சி
- பளை
- பரந்தன்
- பூநகரி
- முல்லைத்தீவு
- புதுக்குடியிருப்பு
- இரணைமடு
- மன்னார்

தொடர்புகளுக்கு:

**074 090 5117,077 725 1036**

(CS 21017) (2/6)

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு**

- **நிலப்பரப்பு**
- **18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.**
- **நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்**
- **திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்**
- **அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்**
- **வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.**

**பார்வையிடும் நேரம்**

**காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை**

**தரகர் தேவையில்லை.**

**தொடர்பு:- ஜெயம்**

**077 8147 389**

**077 2417 589**

(CS 46847) (1/6)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Registered as a Newspaper

'ஆள் ஐயா! உனக்கு அமைந்தன மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை; இன்று போய், போர்க்கு
நாளை வா என நல்கினன் – நாகு இளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்.

– கம்பன்


# சஞ்சீவி

மலை 33: வள்ளுவர் ஆண்டு : 2053 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (02.10.2022) சிகரம் : 118


**இந்தியாவின், நாகலாந்து மாநிலத்தின் முன்னாள் அமைச்சரும், எதிர்வரும் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரியில் நடைபெறவுள்ள மாநிலத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளருமான தெனுச்சோ மற்றும் சமதா கட்சி யின் முதன்மைப் பொதுச்செயலாளர் கோன் ஆகியோர் கடந்த வாரம் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வருகை தந்திருந்தனர்.இதன்போது அவர்கள் 'உதயன்-சஞ்சீவி' வாசகர்களுக்காக வழங்கிய நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**



விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் இல்லத்தின் முன்பாக...

# பிரபாகரன் நினைத்திருந்தால் அமெரிக்க ஆதரவோடு தமிழீழத்தை அமைத்திருக்கலாம்!

## இந்தியாவின் ஆதரவோடு ஈழம் அமைய முயற்சிப்போம்!

- நாகலாந்து முன்னாள் அமைச்சர் தெனுச்சோ
- சமதாக் கட்சியின் பொதுச்செயலாளர் கோன்

○ நேர்கரணல் பொ. சோபிகா

**கே:** **போர் முடிந்து 12 ஆண்டுகள் கடந்த பின்னர் இலங்கைக்கு வந்துள்ளீர்கள்? உங்கள் பயணத்தின் பின்னணி என்ன?**

**கோன்:** நான் பலமுறை அங்கு வந்திருக்கிறேன். கடந்த வருடம் சமதா கட்சியும் , ஈழத் தமிழர் நட்புறவு மையமும் இணைந்து ஒரு குழுவாக இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல தலைவர்களை சந்தித்தோம். அதன் பலனாக, நாகலாந்து முன்னாள் அமைச்சர் திரு. தெனுச்சோ அவர்கள் ஈழத் தமிழர்களை நேரில் சந்திக்க வேண்டும் என்று விரும்பியதால், இம்முறை அவரும் நானும் இலங்கைக்கு வந்தோம். நாங்கள் இங்கு யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ( முள்ளிவாய்க்கால்), திருகோணமலை போன்ற பல இடங்களில் உள்ள பாதிக்கப்பட்டவர்களையும், காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கப் பிரதிநிதிகளையும் சந்தித்தோம். அவர்களின் நிலைமைகளை நேரில் கேட்டுத் தெரிந்துகொண்டோம்.

**கே:** **தமிழ் மக்களின் போராட்ட வரலாறு குறித்து நீங்கள் இந்தியாவில் இருந்தபோது அறிந்ததற்கும், தற்போது நேரில் வந்து பார்த்து தெரிந்துகொண்டதற்கும் இடையில் ஏதேனும் வித்தியாசங்களை உணரமுடிகிறதா?**

**தெனுச்சோ :** நிச்சயமாக. நாங்கள் இந்தியாவில் செய்திகள் வாயிலாக இலங்கையில் உள்ள தமிழ் மக்களைப் பற்றித் தெரிந்து கொண்டவை சிறிய அளவே. ஆனால் இலங்கைக்கு வந்த பின்னர், இங்குள்ளவர்களைச் சந்தித்த பின்னர் 'இவ்வளவு கொடுமைகள் இங்கே நடந்தனவா?' என்ற வேதனை எழுகின்றது.

நாங்கள் இந்தியாவில் இலங்கை பற்றியும், ஈழத்தமிழர்கள் பற்றியும் செய்திகளில் படித்தது வேறு, நேரில் கண்டது வேறு. இங்கே ஈழத் தமிழ் மக்கள் படும் இன்னல்களை கண்டோம். கணவனை, மகன்களை, மகள்களை காவு கொடுத்துவிட்டு அழும் பெண்களுக்கு ஆறுதல் கூற எங்களிடம் வார்த்தைகள் இல்லை. அனைவரும் இராணுவக் கண்காணிப்பில் உள்ளனர். இது மனித உரிமை மீறல். இந்திய அரசு ஐ.நா .சபையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக குரலெழுப்ப வேண்டும். போர்க் குற்றவாளிகளுக்கு தண்டனையைப் பெற்றுத்தரவேண்டும் . அதற்கான நடவடிக்கைகளை நாங்கள் முன்னெடுத்துச் செல்வோம். அரசியல் ரீத்தியான அனைத்து அணுகுமுறைகளையும் நாங்கள் மேற்கொள்வோம். சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் ஒருங்கிணைப்போடு மீண்டும் ஒரு முறை இலங்கைக்கு பயணிக்க இருக்கிறோம்.

**கே:** **அப்படியானால், ஈழமக்களின் போராட்டம் மற்றும் உண்மை நிலை என்பன இந்திய மக்களுக்கு திட்டமிட்டு மறைக்கப்படுகின்றன என நினைக்கிறீர்களா?**

**கோன்:** மறைக்கப்படுகிறது என்று சொல்வதற்கில்லை. ஈழத் தமிழர்கள் படும் இன்னல்களை தமிழ் நாட்டு மக்கள் அறிந்துள்ளனர். தமிழ் நாட்டின் தலைவர்கள் ஆரம்ப காலம்தொட்டு ஈழத்துக்காகக் குரல் கொடுத்துக்கொண்டே இருக்கிறார்கள். ஈழ மக்களுக்காக அவர்கள் மிகப்பெரிய போராட்டங்களை எல்லாம் முன்னெடுத்துள்ளார்கள். இன்றும் அதற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ் நாட்டு ஊடகங்கள், செய்திகளை உணர்வுபூர்வமாக மக்களிடம் கொண்டு சேர்க்கின்றார்கள். ஆனால் மற்றைய மாநில ஊடகங்கள் ஈழத்தமிழ் மக்களின் விடயங்களுக்கு அதிமுக்கியத்துவம் அளிக்க மாட்டார்கள். அதனால்தான் ஈழத்தில் நடந்த பல சம்பவங்களையும், அதன் தாக்கங்களையும் இந்தியாவின் ஏனைய மாநில மக்கள் சரிவர அறிந்துகொள்ள முடிவதில்லை. இனிமேல் அந்தக் குறையை நிவர்த்தி செய்து, ஈழமக்களின் வேதனையை, அவலத்தை இந்தியாவின் ஏனைய மாநில மக்களிடத்தும் கொண்டு போய்ச் சேர்க்க நாம் முனைவோம்.


**கே:** **அடக்கி ஒடுக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களின் தொடர்போராட்டம் குறித்து உங்கள் கருத்து என்ன?**

**தெனுச்சோ:** உலகம் முழுவதும் ஒடுக்கப்பட்ட இனங்கள் போராட்டத்தின் மூலமே தம் உரிமையை மீட்டுள்ளனர். உரிமைகளைப் பெறும்வரை போராட்டம் என்பது இன்றியமையாததே.

**கே:** **இலங்கையில் நீங்கள் காணமலாக்கப்பட்டோரின் உறவுகள், பாதிக்கப்பட்ட மக்கள் என்போரைச் சந்தித்ததாகக் கூறுகின்றீர்கள். அந்தச் சந்திப்புகள் மூலம், அவர்கள் தமது போராட்டங்களை எந்த வடிவங்களில் இனிவரும் காலங்களில் மேற்கொள்ளலாம் என நினைக்கிறீர்கள்?**

**கோன்:** தற்போதைய நிலையில், மக்கள் அவர்களால் இயன்றதற்கும் மேல் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை அரசின் கடுமையான கண்காணிப்பு, அச்சுறுத்தல் இவற்றை எல்லாம் தாண்டி அவர்கள் போராடுகிறார்கள். இதற்குமேல் வெளி சக்திகள் அவர்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசின் மீதுள்ள பயத்திலிருந்து மக்கள் விடுபடுவார்கள். இந்தப் போராட்டம் இடைவிடாமல் தொடரும் பட்சத்தில் நிச்சயமாக வெற்றி அடைய முடியும் என்பது எமது கருத்து.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில்....



**கே:** **தமிழ்மக்கள் தம் மீது சிறிலங்கா அரசாங்கமும், படைகளும் மேற்கொண்ட இனவழிப்பு தொடர்பில் சர்வதேசத்திடம் நீதி கோரியுள்ளார்கள். அது தொடர்பில் இந்தியா சரியான ஆதரவினை தமிழ் மக்களுக்கு வழங்கியுள்ளது என எண்ணுகிறீர்களா?**

**கோன்:** ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்தியா சரியாகக் கண் பதிக்கவில்லை. இந்தியா உடனடியாக விழித்தெழ வேண்டும். ஈழம் அமைய இந்தியா வழிவகை செய்யும் பட்சத்தில், இந்திய இறையாண்மைக்கு அச்சுறுதலாக இருக்கும் சீனாவிடமிருந்து இந்தியாவை பாதுகாத்துக் கொள்ளலாம். ஈழம் என்றுமே இந்தியாவுக்கு ஆதரவான நாடாக இருக்கும் என்பது எமது எண்ணம்.

**தெனுச்சோ:** இந்தக் கேள்விக்கு நானும் பதிலளிக்கலாமென எண்ணுகின்றேன். இந்திய தேசத்தில் உள்ள அனைத்து மாநிலங்களின் தலைவர்களையும் ஒருங்கிணைத்து, ஈழத்தமிழர்களுக்கு நேர்ந்த அநீதியை இந்திய அரசின் பார்வைக்கு கொண்டு சென்று, ஈழத்தமிழர்களுக்கான நிரந்தர தீர்வு அமையும் வகையிலான அரசியல் ரீதியான நகர்வுகளை ஏற்படுத்த நாம் பாடுபடுவோம். இந்தியாவின் உதவியுடன் ஈழம் அமையும் சூழ்நிலையை ஏற்படுத்த நாம் முயற்சிப்போம்.

**கோன் :** ஈழத்தமிழர்களும் எம் (இந்தியாவின்) ஆதரவை எதிர்பார்க்கிறார்கள் என்பதை அவர்களுடன் நேரில் கலந்துரையாடியதன் மூலம் கண்டுகொண்டோம். தமிழ் ஈழ விடுதலையில் இந்தியாவின் பங்கு இன்றியமையாதது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் நினைத்திருந்தால் முன்னரே அமெரிக்காவின் துணையோடு ஈழத்தை அமைத்திருக்க முடியும்.

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பாடசாலைகளில் போதைப்பொருள்: யாருடைய தவறு?

நிலாந்தன்

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக வடக்கில் போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும், மிகக் குறிப்பாக பள்ளிக்கூடங்களில் மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதாகவும் அண்மைக்கால புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

இதுதொடர்பில் சமூகவலைத்தளங்களில் பிரசுரிக்கப்படும் கருத்துக்களை கூர்ந்து கவனித்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது.என்னவெனில், பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்க முடியாதிருப்பதன் விளைவுதான் இது போன்ற சீரழிவுகள் என்ற தொனிப்பட பலரும் கருத்து தெரிவிக்கிறார்கள். கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்கள், சட்டவாளர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள் உட்பட பல தரப்பட்டவர்கள் அவ்வாறான கருத்துக்களைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியரின் கையில் இருந்த பிரம்பு பறிக்கப்பட்டதால்தான் இவ்வாறான துஷ்பிரயோகங்கள் பாடசாலை மட்டத்துக்கு பரவியுள்ளன என்று ஒரு பகுதியினர் நம்புகிறார்கள்.கல்வியதிகாரிகளுக்கும், அதிபர் ஆசிரியர்களுக்கும் வகுப்பெடுக்கும் உயரதிகாரிகள் மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது என்று கூறிவிட்டு இப்பொழுது போதைப்பொருள் பாவனை தொடர்பான புள்ளிவிவரங்களை ஒப்புவிக்கிறார்கள் என்று வேறொரு குறிப்பு கூறுகிறது. இந்தக்கருத்துக்கள் எல்லாமே தொகுப்பாக கூறவருவது ஒரு விடயத்தைத்தான். பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள், பிள்ளைகளைக் கடுமையாகத் தண்டித்தால் இதுபோன்ற விடயங்களை கட்டுப்படுத்தலாம் என்பதுதான்.

பாடசாலைகளில் மாணவர்கள் மீது உடல்ரீதியாக அல்லது உளரீதியாக வன்முறைகள் பிரயோகிக்கப்படுவதைக் கட்டுப்படுத்தும் 17ஆம் இலக்க சுற்றுநிருபம் 2005ஆம் ஆண்டு கல்வியமைச்சால் வெளியிடப்பட்டது. அப்பொழுது கல்வியமைச்சின் செயலாளராக கலாநிதி.தாரா டி மெல் இருந்தார். அதே ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 23 ஆம் இலக்கச் சட்டத்தின்படி நீதிமன்றங்களில் சரீரத் தண்டனைகள் நிறுத்தப்பட்டதன் விளைவே மேற்படி சுற்றுநிருபம் என்று கூறப்படுகிறது.மேற்படி சுற்றுநிருபமானது 2016 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட 12 ஆம் இலக்க சுற்றுநிருபத்தில் மீளவலியுறுத்தப்படுகிறது. இந்தச்சுற்றுநிருபமானது ஆசிரியர்களின் கைகளைக் கட்டிப்போடுகிறது என்ற ஒரு விமர்சனம் ஆசிரியர் சமூகத்தின் மத்தியிலும் ஏன் பெற்றோர் மத்தியிலும்கூட உண்டு.

கண்டிப்பான ஆசிரியரே நல்லாசிரியர் என்ற அபிப்பிராயம் தமிழ்மக்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. கண்டிப்பான ஆசிரியர்களே வெற்றி பெற்ற ஆசிரியர்களாகவும் பார்க்கப்படுகிறார்கள்.நாட்டில் உள்ள கல்வி முறையானது பரீட்சையை மையமாகக் கொண்டது.பரீட்சை மையக் கல்வியைப் பொறுத்தவரை சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொடுப்பவரே கெட்டிக்கார ஆசிரியர். அந்த சிறந்த பெறுபேறுகளை அவர் எப்படியும் பெற்றுக் கொடுக்கலாம் என்று பெரும்பாலான பெற்றோர் கருதுகிறார்கள்.இதனால் சிறந்த கல்விப் பெறுபேறுகளுக்காக அதிகம் பலியிடப்படுவது மனித உரிமைகள் என்பதனை பெரும்பாலான பெற்றோர் பொருட்படுத்துவதில்லை. அதனால் தேசியமட்ட பரீட்சைகளை நோக்கி மாணவர்களை தயார்படுத்தும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மனிதஉரிமைகள் மோசமாக மீறப்படுகின்றன.

இப்படிப்பட்டதோர் கல்விச்சூழலில் தண்டனை நிறுத்தப்பட்டதால் பிள்ளைகள் மத்தியில் போதைப்பொருள் அதிகரிக்கிறது என்ற கூற்று மேலோட்டமாகப் பார்த்தால் சரியாகவே தோன்றும்.சில மாதங்களுக்கு முன் ஆந்திராவில் கஞ்சா பாவிக்கும் தனது 15 வயது மகனை அவருடைய தாயார் வீட்டில் ஒரு கம்பத்தில் கட்டிவைத்து அவருடைய கண்களுக்குள் மிளகாய்தூளைத் தூவினார்.இது ஊடகங்களில் பரவலாக வெளிவந்தது. இது போன்ற தண்டனைகள் மூலம்தான் மாணவர்களை மட்டுமல்ல பாடசாலை நீங்கிய இளையவர்களையும், ஏன் ஒட்டுமொத்த சமூகத்தையும் கட்டுப்படுத்தலாம் என்ற ஒரு கருத்து பரவலாக உண்டு.

ஆனால், தனியே தண்டனைகளால் மட்டும் இந்த விவகாரத்தை கையாள முடியாது.ஏனெனில் பிரச்சினையின் வேர்கள் மிகஆழமானவை.அந்த வேர்களைத் தேடிப் போனால் யாரைத் தண்டிப்பது என்ற கேள்வி எழும். நுகர்வோரை தண்டிப்பதா?அல்லது விற்பனையாளர்களைத் தண்டிப்பதா?அல்லது திட்டமிட்டு மாணவர்களைக் குறிவைத்து போதைப்பொருள் வலைப்பின்னலைக் கட்டியெழுப்பும் அரசியல் உள்நோக்கமுடைய சக்திகளைத் தண்டிப்பதா? யாரைத் தண்டிப்பது?

இந்தப்பிரச்சினையின் சமூகப்பொருளாதார, அரசியல் பின்னணி மிகஆழமானது. 2009 க்குப் பின்னரான தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை, முதலாவதாக, தலைமைத்துவ வெற்றிடம் ஒன்று நிலவுகிறது.

இரண்டாவதாக, உலகில் அதிகம் படைமயமாக்கப்பட்ட ஒரு அரசியல், இராணுவ சூழலுக்குள் தமிழ்ச்சமூகம் வாழ்கிறது. நாட்டின் படைக்கட்டமைப்பின் மொத்த தொகையில் சுமார் மூன்றில் இரண்டு பகுதி வடக்கு- கிழக்கில் காணப்படுவதாக ஒரு புள்ளிவிவரம் உண்டு.

மூன்றாவதாக, மேற்சொன்ன இராணுவ மயப்பட்ட சூழல் காரணமாக படைத்துறை புலனாய்வாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் தமிழ்ச்சமூகம் காணப்படுவது.

நாலாவதாக, ஆயுத மோதல்களுக்கு முன்னிருந்த ஒரு சமூகக் கட்டமைப்பு குலைந்து போய்விட்டது.ஆயுதப் போராட்டம் புதிய விழுமியங்களையும் ஒரு புதிய சமூக ஒழுங்கையும் உருவாக்க முற்பட்டது. 2009 இல் ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்டிருக்கும் ஒரு பின்னணியில், ஏற்கனவே இருந்த சமூகக் கட்டமைப்பும் குலைந்து இடையில் ஆயுதப் போராட்டம் கொண்டு வந்த புதிய ஒழுங்கும் குலைந்து, இப்பொழுது ஏறக்குறைய எல்லாச் சமூகக் கட்டமைப்புகளும் குலைந்துபோன ஒரு நிலை காணப்படுகிறது. இவ்வாறான ஒரு பின்னணியில் விழுமியங்களை மீளுருவாக்க வேண்டிய ஒரு சமூகமாக தமிழ்ச்சமூகம் மாறியிருக்கிறது.

ஐந்தாவது , உலகளாவிய தகவல் தொழில்நுட்பப் பெருக்கத்தின் விளைவாக இளைய தலைமுறை கைபேசி செயலிகளின் கைதியாக மாறியிருப்பது.

மேற்கண்ட ஐந்து காரணங்களையும் தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரியவரும்.தமிழ்மக்களைத் தொடர்ந்தும் அரசியல்ரீதியாக தோற்கடிக்க விரும்பும் சக்திகள் போதைப்பொருள் பாவனையை ஊக்குவிப்பதாகவும் போதைப்பொருள் வலைப்பின்னலை அவர்களே நிர்வகிப்பதாகவும் ஒரு குற்றச்சாட்டை தமிழ் அரசியல்வாதிகள் ஏன் முன்வைத்து வருகிறார்கள் என்ற கேள்விக்கும் விடை கிடைக்கும் எனவே போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்துவது என்பது தனியே தண்டனைகளால் மட்டும் சாத்தியமான ஒன்று அல்ல. அது ஒரு கூட்டுச் செயற்பாடாக அமைய வேண்டும். முதலாவதாக, சமூகப் பிரதிநிதிகள்.மக்கள் பிரதிநிதிகள், மருத்துவர்கள் செயற்பாட்டாளர்கள், மதப் பெரியோர்கள், புத்திஜீவிகள், கலைஞர்கள், ஊடகங்கள் என்று எல்லாத் தரப்புக்களும் ஒன்றிணைந்து ஒரு கூட்டுச் செயற்பாடாக அதை முன்னெடுக்க வேண்டும். அதற்கு மக்கள் பிரதிநிதிகள் அல்லது செயற்பாட்டாளர்கள் தலைமைதாங்க வேண்டும்.

> “இளையோர் பிரமிப்போடு பார்க்கும் முன்னுதாரணம் மிக்க தலைவர்கள் மேலெழ வேண்டும்.”

ஆனால் அவ்வாறான ஒரு தலைமைத்துவம் இல்லாத வெற்றிடத்தில்தான் போதைப்பொருள் பாவனை பாடசாலைகள் வரை வந்துவிட்டது.போதைப்பொருள் பாவனை மட்டுமல்ல வாள் வெட்டுக் கலாசாரத்தின் பின்னால் உள்ள உளவியலைத் தீர்மானிக்கும் அம்சங்களும் மேற்கண்டவைதான். இளம் வயதினரின் வேகங்களுக்கு ஈடுகொடுத்து, அவர்கள் மத்தியில் இலட்சியங்களை விதைத்து, அவர்களுடைய சாகச உணர்வுகளைச் சரியான திசையில் திருப்பி, விழுமியங்களை மீளுருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும், செயற்பாட்டாளர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் மதகுருக்களுக்கும் சம்பந்தப்பட்ட எல்லாருக்கும் உண்டு. ஆனால் அந்தக்கூட்டுப் பொறுப்பை எத்தனை பேர் உணர்ந்திருக்கிறார்கள்?

பாடசாலைகளில் தண்டனை நீக்கப்பட்டதை குறித்து முறையிடுகிறோம். ஆனால், ஒரு காலம் எமது பிள்ளைகள் தனியாக பள்ளிக்கூடங்களுக்கு போனார்கள். ரியூட்டரிகளுக்கு போனார்கள். பெற்றோர் அவர்களை காவிச் செல்லும் ஒரு நிலைமை இருக்கவில்லை. ஆனால் இப்பொழுது எல்லா [illegible] வைத்திருக்கிறார்கள். அவர்கள் பிள்ளைகளை பூனை குட்டியைக் காவுவது போல இரவும் பகலும் காவுகிறார்கள். ஏன் காவுகிறார்கள்? பிள்ளைகளை ஏன் தனியாக விட முடிவதில்லை?

ஒரு பாடத்துக்கு இரண்டுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் பிள்ளை படிக்கிறது. அவ்வாறு படிப்பதற்கே நாள் போதாது. இது சுயகற்றலை பாதிக்காதா? அப்படிப் படித்து மேலெழுந்த பிள்ளை என்னவாக வருகிறது? கல்வி பற்றிய தமிழ்ச்சமூகத்தின் அளவுகோல்கள் சரியானவைகளா?இந்த கல்விமுறைக் கூடாக உருவாக்கப்பட்ட ஆளுமைகள் எப்படிப்பட்டவை? இதைக் குறித்த ஒரு சரியான மீளாய்வு தமிழ்ச் சமூகத்திடம் உண்டா? இல்லை.கல்வி தொடர்பாகவும் விழுமியங்களை மீளுருவாக்குவது தொடர்பாகவும்.சமூகத்தை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பாகவும் கூட்டுத்திட்டங்கள் வகுக்கப்படவில்லை. அவற்றை வகுப்பதற்கான அதிகாரம் இல்லை என்று சொல்லிக்கொண்டு 13 ஆண்டுகளை கடந்துவந்து விட்டோம். நாங்களாக சுயகவசங்களை உருவாக்கத் தவறிவிட்டோம். அந்த வெற்றிடத்தில்தான் போதைப்பொருளும் வாள்களும் நுழைகின்றன.

எனவே பிரச்சினையின் வேர்களைத் தேடிப் போனால் முழுச்சமூகமும் அதன் கூட்டுப்பொறுப்பை இழந்து விட்டதைக் காணலாம். அண்மையில் எரிபொருள் வரிசைகளில் நின்றபோது நாங்கள் ஒரு சமூகமாகத் தோல்வியடைந்தமை தெரியவில்லையா? உங்களுடைய பிள்ளைக்கும் உங்களுக்கும் இடையே ஒரு வெளியாள் போதைப்பொருளை, வாளைக் கொடுக்கிறான் என்றால் உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ ஓர் இடைவெளி இருக்கிறது என்று பொருள்.உங்களுக்கும் பிள்ளைக்கும் இடையே எங்கேயோ தொடர்பாடல் அறுந்துவிட்டது என்று பொருள். நீங்கள் பிள்ளையோடு மேலும் கூடுதலாக நேரத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது என்று பொருள். பிள்ளைகளை இரவு பகலாக வகுப்புகளுக்கு காவிச் செல்கிறீர்கள். ஆனால் பிள்ளைகளோடு மனம் விட்டு கதைக்கின்றீர்களா?

பூனை குட்டியைக் காவுவது போல பிள்ளைகளைக் காவுகிறோம். சிறந்த கல்விப் பெறுபேறுக்காக மனித உரிமைகளைப் பலிகொடுக்கத் தயாராக இருக்கிறோம்.அந்தக்கல்விப் பெறுபேறுகளின் விளைவாக நாங்கள் உருவாக்கிய ஆளுமைகள் எத்தகையவை என்ற கேள்வியை எப்பொழுதாவது எங்களை நோக்கி கேட்டிருக்கிறோமா?

இதுதான் பிரச்சினை. ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப அரசியல்வாதிகளால் முடியவில்லை. சமூகச் செயற்பாட்டாளர்களால் முடியவில்லை, சமயப் பெரியார்களால் முடியவில்லை, புத்திஜீவிகள், படைப்பாளிகள், ஊடகங்களால் முடியவில்லை. போதைப்பொருளிலிருந்து பிள்ளைகளை விடுவிப்பதென்றால் புனர்வாழ்வும் மட்டும் போதாது.

தண்டனைகளால் பலன் இல்லை. மாறாக சமூகத்தை மீளக் கட்டியெழுப்ப வேண்டும். விழுமியங்களை மீளுருவாக்க வேண்டும்.இளையோர் பிரமிப்போடு பார்க்கும் முன்னுதாரணம் மிக்க தலைவர்கள் மேலெழ வேண்டும். திரைப்பட நாயகர்களையும் சண்டியர்களையும் முன்னுதாரணமாகக் கொள்ளும் வெற்றிடம் ஏன் ஏற்பட்டது? எனவே இளையோரை இலட்சியப்பற்று மிக்கவர்களாகவும், உன்னதமான சமூகக் குறிக்கோளை நோக்கி எய்யப்பட்ட அம்புகளாகவும் மாற்றுவதற்கு தனியாக ஆசிரியர்களால் மட்டும் முடியாது. மருத்துவர்களால் மட்டும் முடியாது. உளவளத் துணையாளர்களால் மட்டும் முடியாது. புனர்வாழ்வு நிலையங்களால் மட்டும் முடியாது. அது ஒரு கூட்டுப் பொறுப்பு.

ஜெனிவாவில் அரசாங்கத்தை பொறுப்புக்கூற வேண்டும் என்று கேட்கும் ஒரு மக்கள்கூட்டமானது, சமூகச்சீரழிவுகள் குறித்து தனக்குள்ள கூட்டுப் பொறுப்பையும் உணர வேண்டும். கீழிருந்து மேல் நோக்கிய சுய பாதுகாப்புக் கவசங்களைக் கட்டியெழுப்ப வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மருத்துவ வரலாறு

சில குறிப்புக்கள்

## இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரி

○ பா. துவாரகன்

10

மருத்துவர் கிறீன் 1847 இல் யாழ்ப்பாணத்தில் மேற்கொண்ட முதலாவது சத்திரசிகிச்சையால் பண்டிதர் முத்துத்தம்பி உயிர்பெற்றமை , அன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற சுதேச மருத்துவராக விளங்கிய இளையதம்பியின் மைந்தன் வைத்திலிங்கத்துக்கு ஆங்கில மருத்துவத்தையும் சத்திரசிகிச்சை முறையையும் கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை ஏற்படுத்தியது.


வட்டுக்கோட்டையில் மருத்துவப் பணியை ஆரம்பித்த மருத்துவர் கிறீன் ,அமெரிக்க மிஷனரிகளது வேண்டுகோளை ஏற்று மானிப்பாய்க்குச் சென்று அங்கு தனது மருத்துவப் பணியைத் தொடர்ந்தார். யாழ்ப்பாணத்திலே மருத்துவ மற்றும் சத்திரசிச்சைக் கற்கைநெறியை ஆரம்பிக்க வேண்டும் என்பதில் கிறீன் மிகவும் ஆர்வமுடன் இருந்தார். கிறீன், யாழ்ப்பாணத்தில் 10,000 பேருக்கு ஒரு மருத்துவரையாவது நியமிப்பது அவசியம் என்று கருதினார். 1848 இல் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மொத்த சனத்தொகை 3 இலட்சம். எனவே 30 மருத்துவர்களைப் பயிற்றுவிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

அன்றைய காலப்பகுதியில் அமெரிக்காவிலுள்ள மருத்துவப் பல்கலைக்கழகங்களில் பின்பற்றப்பட்ட 3 வருட பாடத்திட்டத்தையே கிறீன் மானிப்பாயில் 1848 இல் நிறுவிய இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியிலும் நடைமுறைப்படுத்தினார்.

**இலங்கையின் முதலாவது மருத்துவ மாணவர் அணி**
**(1848 - 1850)**

1. **ஜோசுவா இடன்போர்த்**
2. **ஜோன் டெனின்சன்**
3. **இளையதம்பி வைத்திலிங்கம்**

மேற்குறிப்பிட்ட மூன்று மாணவர்களுமே மானிப்பாயில் கிறீனது மருத்துவக் கல்லூரியில் முதல் வகுப்பில் பயின்றவர்கள். இங்கு ஆரம்பத்தில் ஆங்கில மொழி மூலமே மருத்துவக் கற்கை நெறி







மருத்துவர் கிறீன் 1848 இல் மானிப்பாயில் ஆரம்பித்த இலங்கையின் முதலாவது மருத்துவக் கல்லூரியும் போதனா மருத்துவமனையும்
(எண்ணெய் வருண ஓவியம் - ஞான குருபரன் காப்புரிமை : யாழ்ப்பாண மருத்துவ அருங்காட்சியகம் )

மருத்துவர் கிறீனால் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிலர் வட்டுக்கோட்டை செமினரியில் மருத்துவப் பயிற்சியைப் பெற்று மருத்துவர்களாகக் கடமையாற்றிய போதிலும் , அவர்கள் முறைப்படி மருத்துவப் பல்கலைக்கழகத்துக்குரிய பாடநெறியைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்றவர்கள் அல்லர். இலங்கையின் முதல் வகுப்பு மாணவர்கள் என்ற அரிதான, அதிகஅளவில் பகிரப்படும் புகைப்படத்தில் சுதேச உடையில் காணப்படும் மாணவர்கள் 6 பேரில் ஜோசுவா இடன்போர்த் மட்டுமே கிறீனது மருத்துவக் கல்லூரியில் முதலாவது அணியில் பயின்றவர்; ஏனைய ஐவரும் கிறீனது மருத்துவக் கல்லூரியில் பயின்ற 2 ஆவது அணி மாணவர்கள் (1850-1853) ஆவர்.

ஜோசுவா இடன்போர்த், ஜோன் டெனின்சன் ஆகிய இருவரும் கிறீனுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய அமெரிக்க மிசனரி மருத்துவர் நேத்தன் வோட்டிடம் வட்டுக்கோட்டை செமினரியில் மருத்துவக் கல்வியின் ஆரம்ப அறிவைப் பெற்றனர். மருத்துவர் கிறீன் ஜோசுவா இடன்போர்த்திடம் தமிழ் மொழியைக் கற்றார். யாழ்ப்பாணத்திலிருந்து 1849 இல் மருத்துவர் கிறீன் மாசாசுசெட்ஸ் மாநிலத்தில் உள்ள பிறதேசங்களுக்கு மிஷனரிகளை அனுப்பும் அமெரிக்க மிஷன் சங்கத்துக்கு (ABCFM) வரைந்த கடிதம் ஒன்றில் அன்றைய யாழ்ப்பாணத்தின் நிலைமையைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"யாழ்ப்பாணத்தில் கொலரா மிகவும் உக்கிரமாகக் கட்டுப்படுத்த முடியாதளவுக்குப் பரவிவருகிறது. இது 1845 இல் தாக்கிய கொலராவைப் போன்று தீவிரமாக மக்களிடையே பரவியுள்ளது. 1845 இல் பரவிய கொலரா அன்றைய யாழ்ப்பாணத்தின் சனத்தொகையில் 10 சதவீதத்தினரைக் காவுகொண்டது. இன்று (1849 இல்) தீவிரமாகப் பரவும் கொலரா இரு அமெரிக்க மிஷனரிகளது உயிர்களைக் காவு கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் இன்று மக்களது உயிரைப் பறிக்கும் பிரதான நோய்களாகக் கொலராவும் சின்னம்மையுமே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 3 மருத்துவ மாணவர்கள் தங்களது மருத்துவப் படிப்பின் முதல் வருடத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளனர். இக்காலப் பகுதியில் 7 மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள் அவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுள்ளன"

1849 ஆம் ஆண்டு பெப்பிரவரி மாதம் 3 ஆம் திகதி மருத்துவர் கிறீன் தனது சகோதரர் ஜோனுக்கு வரைந்த கடிதத்தில் தான் யாழ்பாணத்துக்கு வந்து முதல் ஓராண்டு காலப்பகுதியில் மேற்கொண்ட சத்திரசிகிச்சைகள் பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"என்னிடம் சிகிச்சைக்கு வந்த பலருக்குக் கட்டிகளைச் சத்திரசிச்சை செய்து அகற்றினேன். கட்ராக்ற் சத்திர சிகிச்சைகளைப் பலருக்கும் மேற்கொண்டேன். ஒரு தடவை ஸ்ராங்குலேற்றட் கேர்ணியாவுக்கும் (strangulated hernia) சத்திரசிகிச்சை மேற்கொண்டேன். ஒருவருடைய பாதிக்கப்பட்ட கையை அகற்றினேன். புற்றுநோய்க் கட்டிகளையும் பலதடவை அகற்றியுள்ளேன். கைவிரல்கள், கால் விரல்களையும் சிலருக்கு அகற்ற வேண்டி இருந்தது. எலும்பு முறிவுகளுடன் வந்த பலருக்கும் அவர்களது காயங்களுக்கும் சிகிச்சை அளித்தேன். மிகவும் ஆபத்தான நிலையில் என்னிடம் குழந்தைப் பிரசவத்துக்கு வந்த தாய்மாரையும் கவனிக்க வேண்டியிருந்தது.

இங்கு ஓய்வாக இருப்பது என்பது சாத்தியமற்றது. நோயாளர்கள் வந்து கொண்டே இருப்பர். மருத்துவர்களது கடமை எப்போதும் ஓய்வின்றியே காணப்படும் என்பதை நீ அறிவாய்........ கடந்த திங்கட்கிழமை புற்றுநோய் பரவியிருந்த ஒருவருடைய இடதுபுற மேல்தாடையையும் கன்னத்திலுள்ள சில என்புகளையும் அகற்றினேன் .........நேற்று அவசியமான நோயாளர்களைப் பார்வையிட்டு மாணவர்களுக்குச் சிறந்த விரிவுரையை எடுத்தேன்."

மருத்துவர் கிறீன் இலங்கைக்கு வந்த முதல் ஓராண்டு காலப்பகுதியிலேயே பல்வேறுபட்ட சிக்கலான சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டிருந்தமையை இந்தக்கடிதம் மூலமாக அறியமுடிகிறது. கிறீன் இலங்கைக்கு வந்த முதல் 13 மாதங்களில் 2,544 பேருக்கு சிகிச்சை அளித்துள்ளார். இவர்களில் மூன்றிலொரு பகுதியினர் சத்திரசிகிச்சைக்குரியவர்களாக இருந்தனர். இந்தக் காலப் பகுதியில் மருத்துவர் கிறீன் சத்திரசிகிச்சையின் போது மயக்கமருந்து பாவித்தமைக்கான எந்த ஒரு குறிப்பும் காணப்படவில்லை. [illegible] ஆம் ஆண்டு [illegible] அறிமுகமாகியது. இந்தக்காலப் பகுதியில் கிறீன் சத்திரசிகிச்சையின்போது ஒபியம் , ஈதர் , எதனோல் கலந்த வலி நிவாரணி மருந்துகளைப் பாவித்திருக்கலாம். இக்காலப்பகுதி அமெரிக்க இலங்கை மிஷன் பதிவுகள், மேற்குறிப்பிட்ட மருந்துகள் மீதமிருப்பதைக் குறிப்பிடுகின்றன.

கிறீன் 1850 ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் அமெரிக்க மிஷனுக்கு அனுப்பிய கடிதங்களில் தான் தமிழ் மொழியில் சரளமாகப் பேசவும் எழுதவும் வல்ல புலமை பெற்றிருந்தமையையும் முதலாவது அணி மருத்துவ மாணவர்கள் 2 ஆவது வருட கற்கைநெறியைப் பூர்த்தி செய்து பொதுமக்களிடையே அறிமுகமாகி சிகிச்சை அனுபவத்தைப் பெறுவதற்குத் தயாராக இருந்தமையையும் குறிப்பிடுகிறார். இந்தக் காலப்பகுதியில் 1850 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிய ஆபத்துக்குதவிச் சங்கத்தினர் (FriendinNeed Society) யாழ் நகரத்தில் டிஸ்பென்சரி மற்றும் மருத்துவமனையை நிறுவ விரும்பி 700 ஸ்ரேலிங்-பவுண் நிதியை நன்கொடை மூலம் திரட்டியிருந்தனர். (தொடரும்)

**யாழ்ப்பாண மருத்துவ வரலாற்று ஆவணத் திரட்டுக்கான தகவல்கள், புகைப்படங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.**

- 1850- 2022 காலப்பகுதியில் யாழ். போதனா மருத்துவமனையில், வடபகுதி சுகாதாரத் துறையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பின்வருவோர்:

மருத்துவ அதிகாரிகள், மருத்துவ நிபுணர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், துணை மருத்துவ சேவையாளர்கள் , மருத்துவமனை மேற்பார்வையாளர்கள் முதலானோரின் வாழ்க்கைக் குறிப்புக்கள், புகைப்படங்கள், இவர்களைப்பற்றி பத்திரிகைகள் , ஏனைய அச்சு ஊடகங்களில் வெளிவந்த தகவல்கள், மருத்துவம் மற்றும் மருத்துவமனை பற்றிய தகவல்கள், புகைப்படங்கள், நியமனக் கடிதங்கள் முதலானவை.

- இணுவில் மக்லியோட் மருத்துவமனை, மூளாய் கூட்டுறவு மருத்துவமனை, மற்றும் காரைதீவு ஹமன்ஹீல் கோட்டையில் தொற்றுநோய்க் காலத்தில் இயங்கிய இடைத்தங்கல் முகாம் : இங்கு 2 ஆம் உலகப்போர் காலத்தில் இயங்கிய மருத்துவமனை, ஊர்காவற்றுறை, புத்தூர், பருத்தித்துறை, மன்னார், பேசாலை, வவுனியா முதலான இடங்களில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் இயங்கிய மருத்துவமனைகள், கடமையாற்றிய மருத்துவர்கள், தாதிகள் பற்றிய கட்டுரைகள், தகவல்கள், புகைப்படங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- ஆக்கங்கள், தகவல்கள், புகைப்படங்களை baladhuvarahan@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது பா. துவாரகன், அபிவிருத்தி உத்தியோகத்தர், போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாக அனுப்ப முடியும். மேலதிக தகவல்களுக்கு +94774534157 என்ற வட்ஸப் (புலனம்) தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்க.

- ஒப்படைக்கப்படும் புகைப்படங்கள், ஆவணங்கள் இலத்திரனியற் பிரதியாக்கத்தின் பின்னர் தேவைப்படின் மீள வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ கோகுலராகவன்



# கே.எஸ்.ராஜா:

## காற்றில் மிதக்கும் குரல்வசியக்காரன்


ஒரு பாடகனை நினைவுகூர்வது பெரிய விடயம்தான்.
ஏனெனில் அவன் பாடல் எம் வாழ்வின் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்தி விடும். நினைவைக்கிளறி விடும். எனவே பாடகன் அடிக்கடி ஞாபகத்தில் வருவான். அல்லது அவன் பாடல் நினைவில் வரும். இதனாலேயே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாடகனைப் பிடித்துப் போய்விடும்.
ஒரு அறிவிப்பாளன் அவ்வளவு தூரம் தாக்கத்தை தரமாட்டான். கேட்டுவிட்டு போய்விடுவோம். அறிவிப்புத்தானே.
ஆனால் ஒரு அறிவிப்பாளன் நினைவில் நீண்ட தூரம் வருகின்றான்.
அவன் குரல் காதில் இப்போதும் ஒலித்துக் கொண்டு இருக்கிறது. மீண்டும் கேட்டுவிட மாட்டோமா?

17




என ஏக்கத்தை தருகிறது. யார் அவர்?
அறிவிப்பாளர் கே.எஸ். ராஜா தான் அந்தக் குரலின் சொந்தக்காரன். இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் அறிவிப்பாளராக 70களில் இருந்து 80கள் வரை வேலை பார்த்தார். தமிழ் வானொலிகளின் முன்னோடி இலங்கை வானொலியே .அதை யாரும் மறுக்க முடியாது. அதிலும் வர்த்தக சேவை. அதில் கேட்ட பாடல்கள் எத்தனை? கோடிக்கணக்கில் வருமே. கே.எஸ். , அன்று பகல் பன்னிரெண்டு மணி நிகழ்ச்சிக்கு வருகிறார் என்றால் றேடியோவை விட்டு நகர மாட்டோம். இப்போதும் ஞாபகம், அவர் குரலில் 'மட்டக்களப்பு மங்களா தங்களா' என்ற நேயர்கள் அடிக்கடி பாட்டுக் கேட்பார்கள்.
கே.எஸ்.ராஜா என்கிற கே.சிறிஸ்கந்தராஜா அறிவிப்பில் பல படிமங்களை உருவாக்கினார்.
"வீட்டுக்கு வீடு வானொலிப்பெட்டிக்கு அருகில் இருக்கும் ரசிகப் பெருமக்கள் அனைவருக்கும் அன்பு வணக்கங்கள்."
என்றபடி அவர் தொடங்கும் அறிவிப்பைக் கேட்டவுடன் ஏதோ ஒரு உவகை தோன்றும். அவரது குரலின் வேகம் ஈடு இணையற்றது. வீட்டில் இருக்கும் அனைவரும் அவரது குரலுக்கு மகா இரசிகர்கள்.
ஞாயிற்றுக்கிழமை அனைத்து வேலைகளையும் விட்டுவிட்டு றேடியோப் பெட்டிக்கு அருகில் இருந்து விடுவோம். லலிதாவின் 'பாட்டுக்குப் பாட்டு' எமக்குப் பிடித்த நிகழ்ச்சி. இந்த வகை நிகழ்ச்சியின் ஆரம்பகர்த்தாக்களாக கே.எஸ்.ராஜாவும். பி.எச். அப்துல் ஹமீத்தும் இருந்தார்கள்.
புதிர் நிகழ்ச்சிகள், வினாடி வினா ,போன்ற பல நிகழ்ச்சிகள் அவரால் வடிவமைக்கப்பட்டன. இவை விளம்பரதாரரின் பெயரால் அழைக்கப்பட்டன. 'உமாவின் வினோத வேளை' கே.எஸ்.வழங்கிய ஒரு நிகழ்ச்சி. இதில் கே.எஸ். ராஜாவுடன் உரையாட வேண்டும். மடக்கி விடுவார்.
அடுத்தது திரைவிருந்து. இதிலும் ராஜா கலக்கி இருப்பார்.
"ராஜா என்னை விட்டுப்போகாதீங்க "
இது நீயா திரைப்பட வசனம். அதை ஒலிபரப்பி, இடையில் வெட்டிக்கொண்டு "இல்லை நேயர்களே ராஜா போகும் நேரம் வந்து விட்டது" என்று முடிப்பார்.
இது போல பல புதுமைகளை திரைவிருந்தில் செய்வார்.
"எம்.ஜி.ஆர் அவர்களே உங்கள் இலட்சியம் என்ன" ?என்ற கேள்வியைக் கேட்டு எம்.ஜி.ஆர் நடித்த 'ராமன் தேடிய சீதை' படத்தில் அவர் பேசும் "அழுறவங்களை சிரிக்க வைக்கிறதும், சிரிக்கிறவங்களை சிந்திக்க வைக்கிறதும் எனது இலட்சியம் "எனும் வசனத்தை ஒலிக்க விடுவார்.
இந்தியாவில் தோற்ற படங்கள் கே.எஸ். ராஜாவின் விளம்பரத்தால் இலங்கையில் ஓடின. அவர் புகழ் தமிழ்நாடு வரை பரவியிருந்தது. கமல்ஹாசன் "இரு நிலவுகள்" (1979) படத்தில் தன் பெயரை கே.எஸ். ராஜா உச்சரிப்பது போல உச்சரிப்பார். தமிழ்நாட்டுக்கு மேடை நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கவும் விரும்பி அழைக்கப்பட்டார். அவருக்காகவும் இரசிகர்கள் திரண்டனர்.
கணிதப் பட்டதாரியான கே.எஸ்., இலங்கைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகக் கடமையாற்றி விட்டு, அறிவிப்புத்துறைக்கு விரும்பி வந்தார்.
கலாநிதிப் பட்டப்படிப்பை இடையில் விட்டு விட்டார். அவர் அங்கேயே (பல்கலைக்கழகத்தில்) இருந்திருக்கலாம். அல்லது திரும்பச் சென்று விரிவுரையாளராகப் பணி செய்திருக்கலாம். பேராசிரியராக வரக்கூடிய புலமை இருந்தவர். வாழ்க்கை திசைமாறி விட்டது.
புரட்சிப் பாடல்களை றேடியோவில் ஒலிபரப்பியதற்காக அவர் கைது செய்யப்பட்டார். அவர் ஒலிபரப்பியவை தமிழ்ப் பாடல்கள் தான்.
நான்கு மாதக் கடூழியச் சிறைத்தண்டனை. வெளியே வந்தவரின் வேலை பறிக்கப்பட்டது. தான் 'ராஜாவாக' இருந்து வேலை பார்த்த இடத்திலேயே பகுதிநேர அறிவிப்பாளராக கடமையாற்ற வேண்டிய நிலை. இடையில் மேடை நிகழ்ச்சிகள். இதில் கே.எஸ். ராஜா சோபிக்கவில்லை. 1987 ஆம் ஆண்டாக இருக்கலாம். மிருசுவிலில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் போதை மிகுதியால் தடுமாறினார் என பார்த்தவர்கள் கூறியதாக ஞாபகம். பின்னர் கட்சி ஒன்றின் பிரசார வானொலியில் அவர் குரலைக் கேட்டு இருக்கிறேன்.
"தங்க ஊசியென்றாலும் கண்ணைக் குத்த முடியாதே"
அது உவப்பான நிலை அல்ல. இரசிக்க முடியவில்லை. வெறுப்பை அறிவிப்பாக வழங்கிக் கொண்டிருந்தார். 1994 இல் கொழும்பு கடற்கரையில் அனாதையாக அவர் படுகொலை செய்யப்பட்டு கிடந்தார். இனம் புரியாத கவலை இப்போதும் மனதில் கிடக்கிறது.
அவர் மதுரக்குரலும் ஓய்ந்து போனது. படுகொலைக்கான காரணம்?
இதில் சொல்ல என்ன இருக்கிறது அறிவிப்பாளன் அறிவிப்பாளனாக இருந்திருக்கலாம். அவரது அரசியல் தேடல் சரியான பாதையில் போகவில்லை. அல்லது அரசியல் அவருக்கு தேவையற்ற ஒன்றாகவும் இருந்திருக்கலாம்.
"வணக்கம் நேயர்களே" இன்னும் அவர் குரல் காதில் ஒலித்துக் கொண்டுதான் இருக்கிறது.

(இன்னும் கதைப்பம்)



# மாணவர்களே...

உங்கள் ஆக்கங்களும் சஞ்சீவியில் பிரசுரமாக அனுப்ப வேண்டிய முகவரி

**077 316 5555**

என்ற எண்ணுக்கோ அல்லது
sanjeeviuthayan@gmail.com
361, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கோ அனுப்பலாம்

## பொது அறிவு

1. ஏலக்காயில் இருக்கும் எண்ணெய்யின் பெயர் என்ன?

**வோல்டைல்**

2. தம் வாழ்வில் நீர் அருந்தாத மிருகங்கள்?

**கங்காரு, எலி**

**பி.மதீசன்**, தரம் 5
யா/கோப்பாய் நாவலர் வித்தி.

## தொடர்மொழிக்கு ஒரு மொழி

சுதந்திரமற்று வாழ்பவர்
**அடிமை**
கட்டட வேலை செய்பவன்
**கொத்தன்**
ஆடு மேய்ப்பவர்
**இடையன்**
வீண் செலவு செய்பவர்
**ஊதாரி**
சிறைத்தண்டனை பெற்றவர்
**கைதி**
மனைவியை இழந்தவர்
**தபுதாரன்**
கணவனை இழந்தவள்
**விதவை**
பயணச்சீட்டு வழங்குபவர்
**நடத்துநர்**
முனிவர்கள் வாழும் இடம்
**ஆச்சிரமம்**

## ஓரெழுத்து விடைகள்

1. சுடும் எழுத்து- தீ
2. கேட்கும் எழுத்து?- தா
3. துரத்தும் எழுத்து- போ
4. மாத எழுத்து- தை
5. பூசும் எழுத்து- மை
7. சிரிக்கும் எழுத்து- ஈ
8. பூக்கும் எழுத்து- பூ
9. சுட்டும் எழுத்து- நீ


**வ.ஜானுஷா**,
தரம் 5,
யா/நீர்வேலி சி.சி.த.க.பாடசாலை.



**R.N.ஹெஷோனா**,
தரம்: 8A
யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம்



**சு.டேனுஷா**,
தரம்- 8
வவு/ நெளுக்குளம் கலைமகள் ம.வி.



**தீ.நயனிகா**,
தரம்- 1C
யா/ சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை



**ஏ.நிதுசனா**,
தரம்- 6F
யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தாழைமரத்து வாடி



சஞ்சீவி சிறுகதை

பிரசாந்தி ஜெயபாலன்

ஓவேலம்மா
ஏலோ என்ற அம்பாப் பாடலு
டன் வெண்மணல் தோறும் அனு
மாரின் வாலாக நீண்டிருந்த வலை
யைப் பிடித்து இழுத்தவாறு பின்னோக்கி
நகர்ந்து கொண்டிருந்த தொழிலாளர்
கூட்டத்திலே எட்டு வயதுச் சிறுவன் முதல்
எண்பது வயதுத் தாத்தா வரை நெற்றி
வியர்வையை விரல்களால்
சுண்டிவிட்டவாறு உழைத்துக்
கொண்டிருந்தனர்.

மல்லி கொஞ்சம் சுறுக்கா வாங்க"
"இந்த கம்பான பிடிங்க ஐயா"
"வெரசா வந்து வலையை தூக்குங்க"

"கூடைக்குள்ள மிச்சங் கவனமா மீனைப்போடுங்க" என்றவாறு பலவித தொனிகளில் அன்பு கலந்த கட்டளைகளுடன் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்தது அந்தக் கடற்கரையோரத்து வாடி. இயற்கையின் இளவரசி நானே என்பதாக நீலப்பட்டாடையுடன் நீண்டிருந்த அந்தக் கடற்கரையோரத்தில் , அந்த இளவரசியின் தழுவலுக்காகக் காத்திருக்கும் வெண்மணற்பரப்புக்களில் தென்னங்கிடுகுகளும் பனைமட்டைகளும் காட்டுத்தடிகளும் கலந்து 'அறுக்கை' பண்ணப்பட்டு வரிசை வரிசையாக, வெவ்வேறு வடிவங்களில் அமைக்கப்பட்டிருந்தன "வாடி" எனப்படும் மீனவர் குடில்கள்.

இந்தக் கடற்கரையோரத்தில் இருந்து 'கூப்பிடு தொலைவில் 'சுனாமிப் பாதுகாப்பு எல்லைக்கு அப்பாலே கிராமத்து மீனவர்களின் வசிப்பிடங்கள் அமைந்திருந்தன. அன்றாடம் கடலன்னையை நம்பியே இவர்களது வாழ்வு இயங்கிக் கொண்டிருக்கையில், நாட்டின் தென்பகுதியில் இருந்தும் கிழக்குக் கரையோரத்தில் இருந்தும் இவர்களைப் போன்றோர் தொழிலின் நிமித்தம் இங்கு வந்து வாடிகள் அமைத்துக் குடியேறினர். ஆரம்பத்தில் கிராமத்தவர்கள் இவர்களை எதிர்த்த போதும் பின்னரே உண்மைநிலை புரிந்து அவர்களும் தம்மைப்போல் வயிற்றுச் சோற்றுக்கு அலைவதை உணர்ந்து அவர்களுடன் உறவு பூண்டனர். தம்மைப் போல் அன்றாடம் காய்ச்சிகளுக்கு முதலாளி வர்க்கமே எதிரி என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து கொண்டமையால் போலும் அந்த தாழைமரத்தடி வாடிகளில் சிங்களம் கலந்த தமிழும், கிழக்கிலங்கை முஸ்லிம் சமூகத்து தமிழும், யாழ்ப்பாணத்து தமிழும் இரண்டறக் கலந்த ஒருவிதமான புதுமொழிநடை தினமும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

"ஏலவலே ஏலோ

ஓவேலம்மாஏலோ" என்ற அம்பாப் பாடலுடன் வெண்மணல் தோறும் அனுமாரின் வாலாக நீண்டிருந்த வலையைப் பிடித்து இழுத்தவாறு பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்த தொழிலாளர் கூட்டத்திலே எட்டு வயதுச் சிறுவன் முதல் எண்பது வயதுத் தாத்தா வரை நெற்றி வியர்வையை விரல்களால் சுண்டிவிட்டவாறு உழைத்துக்கொண்டிருந்தனர்.

கையும் காலும் ஓயும்வரை இழுத்துப் போட்ட வலைகளில் இருந்து துடித்துக்கொண்டிருந்த மீன்களை, பக்குவமாக எடுத்துக் கூடையில் போட்டவாறு நிமிர்ந்த பண்டாரவின் கண்களில், வயதுக்கேற்ற வளர்ச்சியின்றி பத்து வயதிலும் ஐந்து வயதுச் சிறுவனின் நிறையுடன் குச்சி குச்சியான கை கால்களுமாக சோமாலியாவின் வறுமையையும் தோற்கடிப்பவன் போல் இருந்த சிறுவன் வினோத் தென்பட்டான்.

பூஞ்சை உடம்புடன் இருந்தாலும் அவனிடம் சோம்பல் என்பதே இதுவரை யாரும் கண்டதில்லை. சும்மா பெயருக்காக வலையை இழுப்பது போல் பாசாங்கு பண்ணிவிட்டு கூலியைப் பெறுவோர் இருந்தாலும், வினோத் தன்னை வருத்தித் தொழில் செய்வதை பண்டார வந்த நாள் முதலே அவதானித்திருந்தான். சில சமயங்களில் நேரம் பிந்தி வந்தாலும் கூட தொழிலுக்குப் பயன்பட்ட கம்பான்களை வளைத்து வைத்தல், மீன்கூடைகளைக் கழுவிக் காயவிடுதல். எஞ்சிய மீன்களைக் கருவாடாக்குவதற்கு உதவுதல் முதலான சிறு சிறு வேலைகளை செய்த பின்னர் தான் அவன் தனக்கான கூலியாக சிறுதொகை மீன்களை வாங்கிச் செல்வான். இவற்றை எல்லாம் அவதானித்த பண்டாரவின் மனதில் இனம், மதம், மொழி என்பவற்றைக் கடந்து அந்தச் சிறுவன் மீது ஏதோவோர் இனம்புரியாத பாசம். அவனைப் பற்றி அறிய வேண்டுமென்ற துடிப்பு. அன்று வேலைகளை முடித்து மதிய வெயிலுக்கு ஒதுங்கி மீனவர் அனைவரும் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சமயம், பண்டாரவின் வாடிக்கு அருகே இருந்த தாழைமரத்து நிழலில் சிறுவன் வினோத்தும் சலீமும் அமர்ந்திருப்பதைக் கண்டு , பண்டாரவும் அவர்களை நோக்கி நடைபோட்டான். "வாங்க அப்பா" என வினோத்தும், "வாங்க நானா" என சலீமும் ஒரே நேரத்தில் அழைத்தவர்களாக பண்டாரவிற்கும் அந்த நிழலில் அமர்வதற்கு இடம்விட்டு நகர்ந்து அமர்ந்தனர்.

"வினோத் சாப்பிட்டியாப்பா?" எனப்பேச்சை ஆரம்பித்தார் பண்டார.

"ம்..ம்" எனச் சிரித்தவன் "காலையில வாடியில சாப்பிட்ட புளியாணமும் சோறும் இப்பயும் வயித்துக்குள்ள இருக்கப்பா..இனியென்ன பின்னேரப்பாட்டையும் இழுத்துப்போட்டு இரவைக்கு வீட்ட போய் சாப்பிடுவம்" என்றதும் அதன் பின்னாலுள்ள வலியையும் வறுமைத் துயரையும் ஏற்கனவே தெரிந்து கொண்ட சலீம் பண்டாரவைப் பார்த்து "எதுவும் கேட்காதீர்கள்.."என்பதாக சைகை செய்துவிட்டு வினோத்தை நோக்கி "தம்பி வாடிக்குள்ள போய் குடிதண்ணி கொஞ்சம் கொண்டு வாறியாப்பா.." எனவும், "இதோ வரேன் அண்ணா.." என நகர்ந்த வினோத்தைப் பரிவுடன் நோக்கியவாறு தான் ஏற்கனவே அறிந்துகொண்ட வினோத்தின் குடும்பநிலவரத்தை பண்டாரவுக்கு சொல்லத் தொடங்கினான்.

"பொடியன் சரியான பாவம் நானா.. அவன்ர வாப்பா முள்ளிவாய்க்காலில் குண்டடிபட்டு மௌத் ஆகிட்டாரு.. உம்மாவும் ரெண்டு தங்கச்சியாக்களும் இருக்காங்க.. இவன்தான் மூத்தபையன் படிக்கிறதில சரியான விருப்பம்.. இப்ப கொரோனாவால பள்ளியெல்லாம் மூடுற வரைக்கும் ஒழுங்காப் படிச்சிட்டுத்தான் இருந்தான். அவங்கட உம்மா ஒரு சாப்பாட்டுக்கடையில வேலை செய்து அங்கின மிஞ்சிற சோத்தையும் மாசாமாசம் வாற கொஞ்ச சல்லியையும் கொண்டு வயித்துப்பிழைப்பை பாத்தாங்களாம். இப்ப என்னத்த சொல்ல? ம்.ம்.... ." என நீண்டபெருமூச்சொன்றை விட்ட சலீம் தொடர்ந்தான்.

"கொரோனா ஊரடங்கால அவங்கட உம்மா வேலை செய்த கடையையும் பூட்டிட்டாங்க. வீட்டில எல்லாரும் பட்டினி.. பள்ளியும் இல்லாததால இவன் இங்க வந்து நாங்க குடுக்கிற மீனை ஊருக்குத் தெற்கால தோட்டம் செய்யிற ஆக்களுகிட்ட கொண்டுபோய் வித்திட்டு அரிசியும் பருப்பும் கொண்டு போனா;தான் வீட்டில அடுப்பு எரியுது. அதுதான் அவன் பகல்ல 'தான் இங்க சாப்பிடுறன்' எண்டு வீட்டில பொய் சொல்லிட்டு இங்கின இருக்கிறான் போல. உதவி செய்ய மனமிருந்தும் எங்கட கையில ஒண்டுமில்லையே நானா" என சலிப்புடன் கூறிய சலீம் , தொலைவில் குடிதண்ணீர்க் குவளையுடன் வினோத் வருவதைப் பார்த்ததும் "யா. அல்லாஹ்! நீ தான் இந்தக் குழந்தைக்கு வழிகாட்டணும்.." என வானை நோக்கி வேண்டியவனாக முகத்தில் வலிந்து வரவழைத்த முறுவலுடன் வினோத்திடம் தண்ணியை வாங்கி 'மடக் மடக்' என குடிக்கத் தொடங்கினான்.

"என்னப்பா ஒரு மாதிரி முகமெல்லாம் வாடிப்போயிருக்கு..?" என்று வினோத் கேட்கவும் நிமிர்ந்து பண்டாரவை நோக்கிய சலீமின் மனதில் அவரது வாடிய முகமும் கலங்கிய கண்களும் பல செய்திகளைச் சொல்லிற்று.. ஏனெனில் பண்டாரவுக்கும் ஊரிலே வினோத்தின் வயதை ஒத்த மகன் உள்ளான். தற்போதைய கொரோனா நிலைமையால் வங்கிகள் மூடப்பட்டிருக்க தன் குடும்பத்தாருக்கு பணம் அனுப்ப முடியாத துயரம்.. ஊரிலே அவனது பையன் பக்கத்து தோட்டத்தில் களை பிடுங்கியும் வெங்காயம் பயிரிட உதவியும் அவர்கள் தரும் சிறுதொகையால் வீட்டிலுள்ளோரின் பசியாற்றி வருவதை தொலைபேசியில் அறிந்த பண்டார, நேற்று முன்னிரவு வேளை தனியே இருந்து அழுது புலம்பியதை சலீம் அறிவான். இப்போது வினோத்தின் கதையைக் கேட்டதும் பண்டாரவின் மனம் எதை நினைத்து வருந்துகிறது என்பதை அறிந்த சலீம் "எல்லாம் சரியாகிடும் விடுங்க நானா.." என அவனது தோளிலே கைபோட்டு ஆதரவாக அணைத்துக்கொண்டான்.


"எல்லாரும் சுறுக்கா வாங்க.. சோம்பல் முறிச்சது போதும்.. வலை வளைக்கணும்" என்ற முதலாளியின் குரல் கேட்டதும் மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் எல்லோரும் எழுந்து கடலை நோக்கி ஓடினர்.. "ஏலம்மா ஏலவலே ஏலேலோ ஏலவலே.." என்ற தொழிலாளர்களின் குரலுடனும் இடையிடையே "ஒழுங்கா இழுங்கடா, பிடிங்கடா.." என கூச்சல்களோடு இழுத்து வரப்பட்ட வலையிலிருந்து ,தெரிந்தெடுக்கப்பட்ட மீன்களை குளிரூட்டப்பட்ட வாகனங்களில் ஏற்றி கொழும்புக்கு அனுப்பிவிட்டு எஞ்சிய மீன்கள் தொழிலாளிகளுக்குப் பங்கிடப்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றைப் பங்கிட்டுக் கொண்டிருந்த பண்டாரவின் கையிலிருந்து வழக்கத்துக்கும் அதிகமான மீன்கள் இரு குச்சிக் குச்சியான கைகள் நீட்டிய சிறு கூடையில் விழுந்து கொண்டிருந்ததைக் கண்ணுற்ற சலீமின் கண்களில் ஈரப்பளபளப்பு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொற்சிலம்பம் போட்டி

103



அனுப்புபவர் பெயர்:..............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
..................................................................
கையொப்பம்:......................................................

ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருகின்றமையால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

## இடமிருந்து வலம்

1. தூர்த்தன் 4. ஏரி நீர் வெளியேறும் வழி 7. நலம்
8. திருமணப் பேச்சின்போது பலரின் எதிர்பார்ப்பு இதன்மீதே உள்ளது
9. மனைவியை இழந்தவன் 11. காய்களின் கொத்து 12. அதிக
13. தாண்டு 14. கெட்டுப் (கற்பிழந்து) போதல் 16. ஈகம் 18.தமது
19.நாடு 20. இணங்க 22. ஊழ் 23. எல்லைப்படுத்தும் விதிகள்

## மேலிருந்து கீழ்

1. பணம் 2. புடைவையின் தலைப்பு 3. தடி 4. காமன் 5. செல்வ
6. கைகூப்புதல் 8. ஒரு சரக்குவகை 10. செம்பு 11. பாண்டவரின் தாய்
13. அம்பு, வில்,வாள் போன்ற ஓர் ஆயுதம் 14. துக்கம் 15. போதிப்பவன்
17. இரத்தல் 20. பெருக்கற் குறி 21. வாளை இதற்குள் போடுவார்கள்

### சொற்சிலம்பம் போட்டி 102 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பக்குவம் 4. சகா 6. மழு 7. சுடர் 8. சமர்க்களம் 11. மாலை 12. கைலாகு 14..பாயம் 15. சரி 16. தக 17. அதிதி 19. கம்பன் 21. சைவன் 23. சிறுமி 24. சினை

**மேலிருந்து கீழ்**

1.பஞ்சமாபாதகம் 2. குமர் 3. வழுக்கை 4. சடம் 5. கார் 7. சுளகு 9. மலையகம் 10.கலாநிதி 13. பெரியன்னை 17. அன்று 18. திசை 20. பசி 22. வசி

**சொற்சிலம்பம் போட்டி இல.103**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்
**உதயன் சஞ்சீவி**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
என்னும் முகவரிக்கு
**07.10.2022 இற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக**
தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

## போட்டி விதிகள்

- வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
- ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
- சஞ்சீவியில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
- போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
- வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே

ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/=

பரிசாக வழங்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.

### போட்டி இலக்கம் 102 இல் வெற்றி பெற்றோர் விவரம்

**1 ஆம் பரிசு**
**ச.கிருபன்**
இல.76, பழம் வீதி
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு**
**சி.பரிமளகாந்தன்**
இல.422, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்

**3 ஆம் பரிசு**
**தி.சங்கவி**
வதிரி வீதி, உடுப்பிட்டி


**4 ஆம் பரிசு**
**திருமதி ச.சந்திரராசா**
பறாளாய் வீதி,
சுழிபுரம்

**5 ஆம் பரிசு**
**இராஜமுத்து சுபாஸ்கர்**
ஆவரங்கால் மேற்கு
புத்தூர்

# யாழ்ப்பாண வரலாறு

1505-1948 வரை

ந.பரமேஸ்வரன்



மருதடி திருவிழா காலத்தில் முதல் தடவையாக ஆறு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் வந்து சனக் கூட்டத்தின் மத்தியில் எம்முடன் இணைந்து கிறிஸ்தவப் பாடல்களை மிகவும் இனிமையாகப் பாடினார்கள். இந்த மாணவர்களின் பாடல்களை பலர் அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தனர். தொடர்ச்சியாக ஐந்து மணித்தியாலங்கள் வேலை செய்தபடியால் எமது ஊழியர்கள் மிகவும் களைப்படைந்து விட்டனர்.சிலர் தங்களை விடுவிக்குமாறு கேட்டனர்.
சிலர் என்னிடம் வந்து 'ஓ அம்மா! இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள்' என்றனர். இரண்டு வருடங்களுக்கு முன்னர் இவர்கள் சிலைகளை வணங்கிக்கொண்டிருந்தவர்கள். சிலர் கோயிலுக்கு போகக்கூடாது என பெற்றோரால் தண்டிக்கப்பட்டவர்கள்.
நண்பர்களே இவர்களுக்காகவும் இன்னும் கிறிஸ்தவத்தை தழுவாமல் வீடுகளில் இருக்கும் சிறுவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யுங்கள்.

மானிப்பாய், ஏப்ரல் 13 ,1883.
மருதடித் திருவிழா மூன்றாம் வருடம் இன்று தீர்த்தத் திருவிழா, இம்முறை எமது அழைப்பின் பேரில் 30 முன்னணி கிறிஸ்தவர்கள் வந்திருந்தனர். கடந்த வருடத்தைப்போலவே இம்முறையும் ஒரு மைலுக்கு அப்பால் வீதிகளில் புத்தக தாங்கிகளுடன் எமது ஆட்களை நிறுத்தினோம்; பந்தல் போட்டு பிரார்த்தனையில் ஈடுபட ஆயத்தமானோம்.
இதற்கென விசேடமாகப் பயிற்றப்பட்ட 40 சிறுவர்கள் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு காலை 10.00 மணிக்கு பிரார்த்தனையில் ஈடுபட்டார்கள். எனது சகோதரி ஆசனங்கள் போடப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று வயலின்,ஓர்கன் என்பவற்றுடன் சிறுவர்களுடன் இணைந்து பாடத்தொடங்கினார். யாழ்ப்பாணத்திலுள்ள எட்டு முக்கியமான பேச்சாளர்கள் சிறுவர்களின் பாடல்களின் இடையே விளக்கங்களை வழங்கினார்கள்.
இம்முறை எமக்கு எதிர்ப்பு கிளம்பியது. சபாபதிப்பிள்ளை என்ற சைவப் பிரசங்கியார் எமக்கு எதிர்ப்புக் காட்டியதுடன் சைவ சமய துண்டுப்பிரசுரங்களையும் விநியோகித்தார். அத்துடன் எமது வளாகத்தினுள் வருவதற்கு எவரையும் அனுமதிக்கவில்லை.
எனினும் கடந்த ஆண்டை விட கூடுதலான மக்கள் வருகை தந்தனர். ஒருவரும் அவர்களைத் தடுக்கவில்லை. ஆயிரக்கணக்கானோர் மர நிழலின் கீழ் இருந்து அமைதியாக எமது பிரசங்கத்தைச் செவிமடுத்தனர். 'கடவுள் அன்பானவர். என்னிடம் வாருங்கள் நான் ஆறுதல் தருவேன், இதயத்தில் தூய்மையானவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் கடவுளைக் காண்பார்கள்' போன்ற வாசகங்களை மதிலில் பெரிதாக எழுதி வைத்தோம்; மக்கள் அதை வாசிப்பதை நாங்கள் அவதானித்தோம்;சிலரின் உதடுகள் இந்த வாசகங்களை திரும்பத் திரும்ப முணுமுணுத்தன; சிலர் எம்மிடம் வந்து விளக்கம் கேட்டார்கள். எமது பேச்சாளர்கள் விளக்கமளித்தனர். அனைவரும் திரும்பத்திரும்ப வாசித்தனர். எமது சிறுவர்கள் ஐந்து மணித்தியாலங்கள் சிறந்த முறையில் அமைதியாகப் பாடுவதிலும் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

நண்பகலில் அரசாங்க அதிபர் துவைனம் கிராமத் தலைமை அதிகாரியால் வழங்கப்பட்ட பாதுகாப்புக் கட்டளையுடன் வந்தார். அவர் வந்த போது எல்லாம் அமைதியாக இருந்தது. பெரிய திருவிழா நடைபெறும் இடத்தில் நாங்கள் எமது வளாகத்தை திறந்து வைத்திருந்தமையும் பெரும் எண்ணிக்கையான மக்கள் எமது வளாகத்தினுள் வந்ததும் கோயிலில் கூட்டம் குறைவாக இருந்ததும் காரணமாக இருக்கலாம்.
அவர் போனதும் தேரை இழுக்கத்தொடங்கினர்.
துவைனம் எமக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்ததுடன் கிராமத்தலைவர் தான் கேள்விப்பட்டதை தனக்கு தெரிவித்ததாகவும் கூறினார். தான் எமது பாடல்களை கேட்க விரும்புவதாகத் தெரிவித்திருந்தார். நான் எமது போதகர் ஒருவரையும் சிறுவர்கள் சிலரையும் அனுப்பி வைத்தேன். பதினைந்து நிமிடங்கள் எமது சிறுவர்கள் தமது இனிமையான குரலில் வயலின் மற்றும் இசைக்கருவிகளுடன் சனக்கூட்டத்தின் மத்தியில் சிறிய பாடல் ஒன்றை பாடினார்கள், அவரும் இரசித்தார்.
(இந்தச் சம்பவத்தை பார்க்கும் போது 1883 ஆம் ஆண்டு, தேர்த் திருவிழாவின் போது மிஷனரிகளின் பிரசாரம் காரணமாக தேர் வீதியுலா நிறுத்தப்பட்டு அரச அதிபர் தலையிட்டு தேரை இழுக்கச் செய்துள்ளார் போலிருக்கிறது.)

மானிப்பாய், ஜூலை 11 ,1884.
எமது தேவாலயத்தில் பெரிய கிறிஸ்தவ திருமணம் ஒன்று நடைபெற்றது. இவ்வைபவத்தில் 800 பேர் கலந்து கொண்டனர்.அனைவரும் யாழ்ப்பாணத்தின் உயர் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். மணமகனின் தந்தை சைவ சமயத்தைச் சேர்ந்தவர். மகனை கிறிஸ்தவம் கற்பதற்காக எமது திருச்சபை விடுதியில் தங்கிப் படிக்க அனுப்பினார். மகன் யாழ்ப்பாணக் கல்லூரியில் தங்கிப் படித்த காலத்தில் உண்மையை உணர்ந்து கொண்டு கிறிஸ்துவிடம் வந்தார். இவர் ஞானஸ்நானம் பெற்றதை அறிந்த பெற்றோர் அவரை வீட்டை விட்டு துரத்தி விட்டனர்.

(குறிப்பு: யாழ்ப்பாண வரலாற்று தொடரில் தற்போது இடம்பெற்று வரும் சம்பவங்கள் யாவும் (Seven Years in Ceylon) நூலாசிரியரின் கருத்துகளே. கட்டுரையாளரின் கருத்துக்கள் எதுவுமில்லை. கட்டுரையாளர் மொழி பெயர்ப்பை மட்டுமே செய்து வருகிறார். )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரபாகரன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அமெரிக்காவால் இந்திய இறையாண்மைக்கு குந்தகம் விளைவிக்கப்படும் என்ற நோக்கத்தில் அவர் அதைப் புறந்தள்ளினார். "இந்தியா எங்கள் தந்தை நாடு" என்று பிரபாகரன் கூறினார். இது இந்திய அரசால் நினைவு கூரப்பட வேண்டியதாகும். இந்திய அரசு ஈழம் அமைக்க முன்வந்தால் அது சீனாவிடமிருந்து இந்தியாவின் இறையாண்மையை காப்பாற்றிக் கொள்ள சிறந்த வழி.

**கே: நாகலாந்து மக்களும் தம் உரிமைக்காக மிக நீண்டகாலமாகப் போராடி வருகின்றார்கள். அவர்களின் விடுதலை போராட்டத்தையும், ஈழ விடு தலை போராட்டத்தையும் எவ்விதம் நோக்குகின்றீர்கள்?**

**தெனுச்சோ:** நாங்கள் இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்பிருந்தே எமது உரிமைக்காக-தனி நாட்டுக்காக- போராடிக் கொண்டிருக்கிறோம். பல ஆயுதப் போராட்டங்கள் இந்திய அரசுக்கு எதிராக எமது மாநிலத்தில் நடந்திருக்கிறது. அவற்றில் எங்கள் மக்கள் பல பேர் மாண்டார்கள். அவர்களில் எனது மூதாதையர்களும் உள்ளடக்கம். ஆனால் இந்திய அரசால் நாகா என்கிற எங்கள் இனம் அழிக்கப்படவில்லை. இன்றும் இந்திய அரசுடன் எங்கள் பேச்சுவார்த்தை தொடர்கிறது. ஆனால் இலங்கையில் பல லட்சம் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். பெண்கள் பாலியல் துன்புறுதல்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இளைஞர்களும், யுவதிகளும் கடத்தப்பட்டிருக்கிறார்கள். இறுதிப்போரில் சரணடைந்தவர்களுக்கு என்ன கதி என்று இது வரை தெரியாமல் உள்ளது.

இவற்றையெல்லாம், இலங்கை அரசு மேற்கொண்ட தமிழின அழிப்பாகவே நாங்கள் பார்க்கிறோம். அதைத்தவிர வேறேதும் இல்லை என்பதை நாங்கள் உணர்கிறோம். முதலில் காணாமல் போனவர்களை அவர்களின் குடும்பத்திடம் ஒப்படைக்க வேண்டும். அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும். இலங்கை அரசு உடனடியாக இது குறித்து வெள்ளை அறிக்கையை வெளியிட வேண்டும்.

**கே: கோன் அவர்களே, முன்னாள் அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் ஈழவிடுதலை போராட்டம் பற்றி கரிசனை கொண்ட ஒருவராக இருந்தார். ஈழம் தொடர்பாக அவருடைய நிலைப்பாட்டில் தான் தற்போதும் அவருடைய கட்சியைச் சேர்ந்த நீங்களும் இருக்கிறீர்களா?**

**கோன் :** எங்கள் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் வழியிலேயே நாங்களும் பயணிக்கிறோம். அவரின் முந்தைய கூற்றுப்படி தான் ஈழமக்களுக்காக,இந்தியாவின் அனைத்து தலைவர்களையும் ஒருங்கிணைக்கும் பணியில் நாம் செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம். அதன் வெளிப்பாடுதான் "நாகலாந்து மக்கள் முன்னணி" கட்சியியின் செயல் தலைவர் தெனுச்சோவின் இலங்கை வருகை.

## கையறு நிலையினிலே கலங்குவதோ நாளும்...?



காவிகளுள் மறைந்திருக்கும்
விகார மனம் கொண்ட
காலிகளின் ஆட்டத்தால்
காலியாகிறதே தாயகம்!

முல்லையிலே மண் கொள்ளை
மூர்க்கமாய் தொடர்கிறதே!
மண்கிண்டி மலையும்
'பஞ்சல்கந்த' ஆகிறது!
'ஆதிசிவன்' வீற்றிருந்த
குருந்தூர் மலை கூட
'குருந்தாவசோக
ராஜமாஹா' விகாரையாகி...
நீராவியடிப் பிள்ளையார் கோயில்
'குருகுந்த' விகாரையாயாகி
குறிவைத்து முளைக்கிறதே!

மனிதப் படுகொலையால்
மலினப்பட்ட மண்
ஒற்றுமைப் பஞ்சத்தால்
ஒன்றுமின்றிப் போகிறதே!

- விக்கிரமன்

# எனது ஊரிலும்தான்... 06

சி.கதிர்காமநாதன்

தான் தி.நகர் பஸ் ஸ்ராண்ட்டின் பக்கத்தில் காமராஜர் கொலனிக்கு முன்னால் கடை வைத்திருப்பதாகவும் சொன்னார்.

ஒருமுறை பஸ் ஸ்ராண்ட்டுக்குப் போய் சைதாப்பேட்டை போகும் வீதியில் நடந்து சுரேஷின் வட்டிக் கடையைப் பார்த்தேன். சுரேஷின் சகோதரர்களும் இருந்தார்கள். கடையின் உள்ளே போனேன். கதைத்தோம். மனித உறவில் மாற்றங்கள் தெரிந்தன. சிரித்தார்கள், நட்புறவானார்கள். இருந்தும் கதைக்கும் போது மனதின் ஒரு மூலையில் இலேசான நம்பிக்கையின்மை தென்படுவது போல இருந்தது. இடையிடையே ஸ்ரீராம் சொன்னது நினைவுக்கு வந்தது. சிலவேளைகளில் நானும் என்னை மறந்துவிடுகிறேன்.

செட்டியார் சிலவேளைகளில் சேலம், நாமக்கல் என்று போய்விடுவார். இடையிடையே கணக்குகளைத் தராமல் ஏமாற்றிவிடுவதுமுண்டு. அந்நேரங்களிலே கெட்டித்தனமாகக் காரியங்களைக் கையாளவேண்டியிருந்தது.

▣ ▣ ▣

நான் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் திருச்சி, மதுரை என்று எல்லா இடமும் சென்று வந்தேன். இங்கு தனியாக எத்தனை நாளைக்கு இருப்பது? இடங்களை எல்லாம் பார்க்க வேண்டாமா? திரும்பி எங்கள் பஸ்ஸில் வருவது சுலபமாக இருந்தது. எந்நேரமும் ஏதாவது யோசனையில் மூழ்கி இருந்த எனக்கு இப்படி இடம்விட்டு இடம்போய்வருவது மனதுக்கு நிம்மதியைக் கொடுத்தது. அன்று வழமைபோல மரத்தடியில் நின்று கதைக்கும் போது சுரேஷின் அண்ணன் பிரகாஷ் சொன்னான்,

"அங்க சண்டை பிடிச்சதும் இங்க ஓடி வந்திடுவாங்கள். இங்க நம்ப ஆக்கள் தங்க இடம்கொடுத்து சாப்பாடு கொடுத்து வைச்சா.. இவங்க குழந்தை பெத்துக்கிட்டு ஓசியிலை இருக்கிறாங்க"

எனக்கு ஒரு மாதிரிப் போய்விட்டது. என்ன இவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்?

"என்ன பேச்சைக் காணோம்?" என்று பிரகாஷ் என்னைப் பார்த்துச் சிரித்தவாறு கேட்டான்.

"நான் என்ன சொல்லுறது? நீங்கள் கதைக்கிறதை நான் கேட்க வேண்டியதுதான். நிலைமை அப்படி"

சுரேஷின் மூத்த அண்ணன் பக்கத்திலிருந்த பார்த்தசாரதியின் காதிலே ஏதோ கூறினான்.

"முரளி உம்மைப் பார்த்தாப் படங்களிலை வர்ற வில்லன் மாதிரி இருக்காம். அவங்கதான் தாடி வைச்சிருப்பாங்க"

இதைக் கேட்ட மற்றவர்கள் பெரிதாகச் சத்தம் போட்டுச் சிரித்தார்கள். அது அந்த இரவிலே பெரிதாக எதிரொலித்தது.

"சிலோனில அதிகம் இப்படித்தான். மூஞ்சியைப் பாத்தே பிடிச்சுடலாம்" என்றார் பார்த்தசாரதி. அவர்களின் பேச்சு அவர்களுக்கு இனிமையாகப் போய்க் கொண்டு இருந்தது. நானும் பேசாமல் கேட்டபடி இருந்தேன். இந்த நேரத்தில் மகாலக்சுமி தெருவில் வேகமாக வந்த வாகனம் எங்கள் வாசலில் பிரேக் பிடித்து நின்றது. பார்த்தோம்.

பொலிஸ் ஜீப்!

"நம்ம இடத்துல இப்பத்தான் முதன்முதலா பொலிஸ் ஜீப் நிக்கிறது" கதவைத் திறந்து ட்றைவர் இறங்கினார். முன்சில்லைத் தட்டிப்பார்த்தவுடன் ஏறி மறுபடியும் கிளப்பிக் கொண்டு போய் விட்டார்.

"போதும்போதும். சிலோன்காரருக்கு கோபம் வந்தாச் சுட்டிட்டுப் போயிடுவாங்க. நாம போயிடலாம். வாங்க" பிரகாஷ் சொல்ல, எல்லோரும் எழுந்தார்கள்.

எல்லோரும் போய்விட்டார்கள். நான் தனித்துவிடப்பட்டேன். காற்று மெல்லிதாக வீசியது. எங்கோ 'ரீவி'சத்தம் கேட்டது. தெருவிலே சிலர் நடந்து போனார்கள். [illegible] இல்லா [illegible] அவசரப்பட்டு விட்டேனோ? இந்தப் பேச்சுக்க



ளைத் தடை செய்ய முடியாது. அனுபவிக்க வேண்டியதுதான். எத்தனைகாலம் இங்கு இருக்கப் போகிறேனோ தெரியவில்லை. இவர்களைக் கோபித்துப் பிரயோசனமில்லை. இவர்களோடுதான் என் காலம் செல்லப் போகிறது. பொறுமை, பொறுமை.

படுக்கையிலே கிடந்தும் நித்திரை வரவில்லை. சுற்றிக் கொண்டிருந்த மின்விசிறியை நிறுத்தினேன். முதலாளியிடம் கொடுத்த கடிதங்களுக்கு வீட்டிலிருந்தும் காந்தனிடமிருந்தும் பதில்கள் வந்தன. எல்லாக் கடிதங்களும் சில மாதங்கள் கழித்தே வந்திருந்தன. கடிதங்கள் வந்து சேர்வதற்கிடையில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தனவோ? காலம் என்ன மாதிரி ஓடுகின்றது?

> "சிலோனில அதிகம் இப்படித்தான். மூஞ்சியைப் பாத்தே பிடிச்சுடலாம்" என்றார் பார்த்தசாரதி. அவர்களின் பேச்சு அவர்களுக்கு இனிமையாகப் போய்க் கொண்டு இருந்தது.

நான் இங்கு வந்து ஒரு வருடத்துக்கும் மேலாகிவிட்டது. அங்கிருந்து வருகின்ற கடிதங்களில் ஒன்றை மட்டும் முக்கியமாகக் குறிப்பிட்டு எழுதுவார்கள்.

"அதிகம் கதைக்காதே. கவனமாக இரு. எங்கள் கடிதத்தை எதிர்பாராமல் நீ ஒழுங்காகக் கடிதம் எழுது."

ஊர் நிலை நான் இருந்தபோது காணப்பட்டதைவிட மிக மோசமாம். வீதிகளிலே துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலங்கள் காணப்படுவதாகவும் அவை தேசத்துரோகிகளினுடையதாக இருக்கலாம் என்றும் எழுதியிருந்தார்கள். கொஞ்சம் கொஞ்சமாகச் சூழ்நிலை அமைதியானது. எனக்கு இன்னமும் நித்திரை வரவில்லை.

▣ ▣ ▣

இன்று கனவேலைகள் .

பஸ்ஸுக்கு சேர்விஸ் செய்தாக வேண்டும். முன்ரயர்கள் நன்றாகத் தேய்ந்துவிட்டன. அவற்றை மாற்றவேண்டும். ரீவியிலே போடப்படும் படமும் தெளிவாக இல்லை என்ற புகார் வேறு. அன்று பெரிதாகச் சத்தம் போட்டு ரகளை பண்ணிவிட்டார்கள். உடனடியாக இவைகளைச் செய்தாக வேண்டும். காலையிலே குளித்தபின், பத்தாம் இலக்க பஸ் ஏறி, எக்மோரினை அடைந்தேன். ஒப்பிஸ் பையனைத் தேநீர் வாங்கிவரச் சொல்லிவிட்டு ,அன்றைய பத்திரிகையை எடுத்துப் பிரித்தேன். இலங்கை விடயம் வந்திருந்தது. ".....மோதல் தொடர்கிறது. ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து அமுல்"

ரீ குடித்துமுடிய பஸ்ஸும் வந்துவிட்டது. உடன் எழுந்துவிட்டேன். வேலையை முடிக்க வேண்டும். பின்னேரம் பஸ் வேலையை முடித்து ஒப்பிஸுக்கு முன்னால் நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி நடந்தபோது யாரோ கூப்பிட்டார்கள்.

பார்த்தால் ஊரில் எனக்குப் பழக்கமான நபர் போலத் தெரிந்தது. உடன் ஞாபகத்துக்கு வரவில்லை. கொஞ்ச நேரத்திலே புரிந்தது. "நீர் சரஸ்வதி ரீச்சரின்ர மகன் தானே? ஆளே மாறிப்போனீர்" "உம்மிலை ஒரு மாற்றமும் இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



○ இராகவன்

# ஊர்ப்புதினம்

இதுக்கை ஊர்ப்புதினம் ஐம்பத்தைஞ்சில உவர் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரின்ர மகன் இரவிக்குமார் அண்ணை தகப்பனைப் பற்றி நானெழுதினதை வாசிச்சுப் போட்டுக் கோல் எடுத்துக் கதைக்கேக்குள்ள, கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரைப் பற்றி இன்னும்கொஞ்சம் விசயஞ் சொன்னவரெண்டும் ,அதையெல்லாம் ஊர்ப்புதினத்தில பதிவு செய்ய வேணுமெண்டும் சொல்லியிருந்தனான். அதை இப்ப பாப்பம்.

கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் வானசாத்திரத்தில தன்ர குருவாகக் கருதினது பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தியைத் தானாம். பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு வானியல் வல்லுநர். தமிழ்லயும் இங்கிலீசிலயும் நிறையப் புத்தகங்களை வானசாத்திரம் தொடர்பாக எழுதியிருக்கிறார். ஏன் கனக்கக் கதைப்பான்? வானசாத்திரத்தில 'கிருஷ்ணமூர்த்தி பத்ததி' (*Krishamurthi pathati*) எண்டொரு சிஸ்ரமே இருக்கெண்டால் அந்தாள் சாத்திரத்தில எந்தளவு விண்ணன் எண்டு உங்களுக்கு விளங்கியிருக்கும். சாத்திரத்தில இன்றஸ்ற் உள்ள ஆக்கள் கூகுள்ள 'Krishna murthi astrology' அல்லது 'Krishna murthi astrologer' எண்டு சேர்ச் பண்ணினால் இதைப் பற்றியெல்லாம் விவரமாத் தெரிஞ்சுகொள்ளலாம். இந்தக் கிருஷ்ணமூர்த்தியைப் பின்பற்றித் தான் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் வானசாத்திரத்தில இறங்கியிருக்கிறார். 1958 காலப்பகுதியில் இலங்கை வானிலை அவதான நிலையத்தில ஒரு வானிலை அவதானியாக நியமனங் கிடைச்சு முதன்முதல்ல மட்டக்களப்பிலதான் கடமையாற்றியிருக்கிறார். தொடர்ந்து வவுனியா, யாழ்ப்பாணம், அனுராதபுரம், மன்னார் எண்டு வேலை செய்து கடைசியாகத் திரும்பவும் யாழ்ப்பாணத்தில வேலை செய்துதான் பெஞ்சனெடுத்தவர்.



பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி

59

முதல்ல 'வானிலை அவதானி' எண்டிருந்த பதவி, காலப்போக்கில 'வானிலை அவதானத் தொழில்நுட்ப அலுவலர்' எண்டு மாறிச்சுது. கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் யாழ்ப்பாணத்தில வேலை செய்யேக்குள்ள பலாலியில தான் அலுவலகம் இயங்கினது. முதல்தரம் 1970 தொடங்கி 1976 வரை அங்கை வேலை செய்து பிறகு அனுராதபுரம், மன்னார் எண்டு வேலை செய்து கடைசியில திரும்ப யாழ்ப்பாணத்துக்கு வந்து பலாலியில 1984 தொடங்கி 1987 வரை வேலை செய்திருக்கிறார். அதுதான் கடுங்காலம். தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்படையத் தொடங்கினகாலம். அப்ப பலாலி ஒப்பீசில கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரும் துன்னாலை அல்லையம்பதியைச் சேர்ந்த சிங்காரம் எண்டாளுந்தான் இயக்கக் கட்டுப்பாட்டுக்குள்ளையிருந்து போய் வேலை செய்தாக்கள். எண்பத்தேழில இவையள் இரண்டு பேரிட்டையும் இயக்கமும் ஆமியும் 'நீங்கள் பலாலியில வேலை செய்யிறதில பிரச்சினையில்லை. ஆனால் உங்கடை பாதுகாப்புக்கு எங்களால உத்தரவாதம் தரேலாது' எண்டு கிளின்கட்டாச் சொன்னாப்போல சிங்காரம் கொழும்புக்கு ராண்ஸ்பர் எடுத்துக் கொண்டு போக கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் வேலைக்குப் போகாமல் நிண்டுட்டார்.



இரவிக்குமார்

பிறகு 14/88 இலக்கச் சுற்றறிக்கையொண்டு வந்தாப் போல இவர் பெஞ்சன் குடுத்திட்டார். ஆனால் உடனை பெஞ்சன் வரேல்ல. நாலுவரியங் கழிச்சு 1992 காலப்பகுதியிலதான் அரியர்ஸோட பெஞ்சன் வந்திருக்கு. இதுக்குள்ள 1989 காலப்பகுதியில இயக்கப்பொடியள் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரைக் காட்டுக்குள்ள கூட்டிக் கொண்டு போய் ஒரு நாலு மாதம் வைச்சிருந்து தங்கடை ஆயுதங்களின்ரை 'கற்லொக்குகளை' மொழிபெயர்ப்புச் செய்விச்சிருக்கினம். பிறகு 1990 இயக்கக் கட்டுப்பாட்டுக்குள் யாழ்ப்பாணம் வந்தாப் போல திண்ணைவேலியில இயங்கின அவையளின்ர மொழிபெயர்ப்பு அலுவலகத்துக்கு மாஸ்ரரைக் கூட்டிக்கொண்டு போய் இன்னுங்கொஞ்ச மொழிபெயர்ப்பு வேலையளைச் செய்விச்சிருக்கினம். மாஸ்ரர் மொழிபெயர்த்ததையெல்லாம் ஒரு புத்தக வடிவில் 'பைண்ட்' பண்ணி வைச்சிருந்து எனக்குக் காட்டியிருக்கிறார்.

(தொடரும்)



# ஆலோசகர் கோத்தா

தாய்லாந்திலிருந்து நாடு திரும்பி, தற்போது ஓய்வில் இருக்கும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை, மொட்டுக் கட்சி செயற்பாட்டாளர்கள் சந்தித்து, சுகநலம் விசாரித்து வருகின்றனர். முக்கியமான வியாபாரிகளும் நாளாந்தம் கோத்தாவின் வீடு நோக்கி வந்தவண்ணமுள்ளனர்.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், தனது குடும்பம் சகிதம் இரண்டாவது தடவையாக தம்பி கோத்தாபயவை சந்திப்பதற்குச் சென்றுள்ளார். இதன்போது அவருடன் மருமகள்மார், பேரக்குழந்தைகளும் சேர்ந்து சென்றுள்ளனர்.

அவர்களுக்காக விசேட இராப்போசனத்தை கோத்தா ஏற்பாடு செய்துள்ளார். பேரப்பிள்ளைகளுடன் கொஞ்சிப், பேசியது மட்டுமல்லாமல், மஹிந்தவுடனும் கோத்தா மனம் விட்டு பேசினாராம்.

அதுமட்டுமல்ல மஹிந்த ராஜபக்சவுடன் அடுத்தக்கட்ட நகர்வுகள் சம்பந்தமாகவும் ஆலோசனை நடத்தியுள்ளார்.

செயற்பாட்டு அரசியலுக்கு மீண்டும் வரும் எண்ணம் இல்லை என்ற போதிலும், திரைமறைவு அரசியலை முன்னெடுப்பதற்கு கோத்தா தயார் நிலையில் இருப்பதாகத் தகவல். இதற்காக மொட்டு கட்சி மாநாட்டின்போது அவருக்கு ஆலோசகர் பதவியொன்று வழங்கப்படவுள்ளதென அறியமுடிகின்றது.

# மொட்டுக்குள் குத்து வெட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை கட்டியெழுப்பும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அதன் ஓர் அங்கமாக தொகுதி ரீதியில் பலமான அரசியல் கட்டமைப்புக்கு தற்போது அடித்தளமிடப்பட்டுவருகின்றது. இதற்கமைய கண்டி மாவட்டத்துக்கான அரசியல் வியூக அறிக்கையொன்றை மஹிந்தானந்த அளுத்கமகே தயாரித்து கட்சிக்கு வழங்கியுள்ளார்.

எனினும், அந்த அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் மஹிந்தானந்த அளுத்கமகே கடுப்பில் உள்ளார். எதற்காக நிராகரிப்பு? எனக் கேட்டு, ரோஹித அபேகுணவர்த்தன உள்ளிட்டவர்களுடன் தர்க்கத்திலும் ஈடுபட்டுள்ளார். நாடாளுமன்ற வளாகத்திலும் இது சம்பந்தமாக சொற்போர் மூண்டுள்ளது. இறுதியில் மஹிந்தவும், நாமலும் தலையிட்டுத்தான் பிரச்சினையை ஓரளவு தீர்த்து வைத்துள்ளனராம்.



# அறிந்தும் அறியாமலும்

○ சுழியன்

## கால்கட்டு!

மலையகத்திலுள்ள முக்கியமானதொரு கட்சியில் முக்கியமான பதவியை வகிக்கும் இளம் அரசியல்வாதிக்கு, கால்கட்டு போடுவது தொடர்பில் குடும்பத்தார் கவனம் செலுத்தியுள்ளனராம்.

அவரை கரம்பிடிப்பதற்கு இலங்கையிலும், இந்தியாவிலும் பல பெண்கள் தயாராகவே இருக்கின்றனராம். முக்கியமான சில தொழில் அதிபர்கள்கூட தமது மகளை மணம் முடித்துவைக்க தூதனுப்பி வருகின்றனராம்.



## கஞ்சா டயானா

கஞ்சாப் பயிர்செய்கையை சட்டபூர்வமாக்க வேண்டும், இரவுநேரக் களியாட்ட விடுதிகளை நள்ளிரவு தாண்டியும் திறந்து வைக்க வேண்டும், பல்பொருள் அங்காடிகளில் 'பார்'களை திறக்க அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும் என அண்மைக்காலமாக தீவிரமாகக் குரல் எழுப்பி வருபவர்தான் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே.

நாடாளுமன்றத்திலும், பொதுவெளியிலும் என எங்கு கதைத்தாலும் 'கஞ்சா' பற்றி ஒரு வார்த்தையேனும் கதைப்பதற்கு அவர் மறப்பதில்லை. டயானாவின் இந்தத் திட்டத்தை எதிர்க்கும் பிக்குகளைக்கூட அவர், சரமாரியாக விமர்சித்துவருகின்றார். 'கலாசாரம்' என்ற ஒரு விடயத்தை முன்னிலைப்படுத்தி, நாட்டை முன்னேற்றமடைய விடாமல் தடுக்கின்றனர் எனவும் அவர் சொற்கணை தொடுத்துள்ளார்.

இந்நிலையில் டயானாவின் சில அறிவிப்புகள் தொடர்பில் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சிலர் கடும் அதிருப்தியில் இருக்கின்றனராம்.

ஏற்கனவே அரசாங்கத்தின் இருப்பு ஊசலாடும் நிலையில், டயானாவின் அறிவிப்புகளும் ஆபத்தாக மாறக்கூடும் என்பதே அவர்களின் அதிருப்திக்கு காரணமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org